# புட்டபர்த்தியில் 'நா



தேவன் - யாழ்ப்பாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புட்டபர்த்தியில்

# 'நான்'

BHAGAVAN SRI SATHYA SAI SEVA SAMITHI
107 KANDY ROAD
JAFFNA
CEYLON
APPD 28-FEB
1968

தேவன் — யாழ்ப்பாணம்

அச்சுப்பதிவு:

ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவனில் ஒரு துளி

— ச.பாலசுந்தரம் பீ. ஏ. (சிறப்பு)

இந் நூல் ஈழத்தின் பிரபல எழுத்தாளரும் நாடக இயக்குநரும், ஆற்றல் மிக்க பேச்சாளரு மாகிய தேவன் —யாழ்ப்பாணம் [இ.மகாதேவன்] அவர்களால் 1982 ஆம் ஆண்டில் எழுதப்பட்டது.

சிறந்த சிந்தனையாளனாகிய தேவன் அவர்கள் 1981 — 82 இடைவெளியில் தாங்கொண்ணாத வயிற்று வலி நோய்க்கு உள்ளானார்.

அவர் இந்தியா சென்றதற்கான காரணிகள் இரண்டு. ஒன்று உலகிலேயே பிரபல்யம் வாய்ந்த வேலூர் மருத்துவ மனையில் தம் நோய்க்கு வைத்தியம் செய்வது. இரண்டாவது பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா வைத் தரிசனம் செய்து ஆசி பெற்று தமது நோயை தீர்க்க வேண்டுவது.

பகவான் அருட் பார்வையினால் அவர் புட்டபர்த்தி சென்றார். பிரசாந்தி நிலையம் கண்டார். பலருக்குப் பல ஆண்டுகளாக கிடைக்காத நேர்காணலும் அவருக்குக் கிடைத்தது.

உலகியல் வாழ்வில் தம் சக்திகள் அனைத்தையும் பிரயோகித்தும் வெற்றி காணாதவன் ஈற்றில் இறைவ னிடம் சரண் அடைவது தவிர்க்க முடியாதது. இதுவே இந்த நூலின் சாராம்சம்.

அவதார புருஷனாகிய பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவிடம் தாம் கண்ட தெய்வீக அருள் தன்மையினை அவர் நமக்கு இந்நூலில் விளக்கியுள்ளார்.

எது எவ்வாறாயினும் இம்மண்ணில் நாற்பது ஆண்டு களாக தேவனின் பல்துறைசார்ந்த பங்களிப்புக்களில் இது சிறியதோர் துளி எனக் கருதி அதனை வரவேற் றுப் போற்றுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

எனக்கு 1972 இல் 'பன்கிறியாடைட்டின்' என்றொரு நோய் வந்ததும், வைத்தியர்கள் கைவிட்டதும், நான் புட்டபர்த்திக்குச் சென்று திரும்பியதும், "புட்டபர்த்தியில் நான்' " என்றொரு கட்டுரைத் தொடர் எழுதியதும் யாருக்காவது நினைவிருக்கலாம்.

எனக்கு நோய் நீங்கியதென்றும் சதையம் என்று பாதிக்கப்பட்ட உறுப்பை எக்ஸ்ரே எடுக்கவில்லையென்றும் தெய்வீகத் தலையீட்டினால் நிகழ்ந்த ஒன்றை ஆய்வு கூட பரிசோதனைக்கு உட்படுத்த விரும்பவில்லை யென்றும் அதில் எழுதியிருந்தேன்.

எப்போதாவது எக்ஸ்ரே எடுக்க நேர்ந்தால் முடிவை 'ஊர்சுற்றியா'ரிடம் சொல்வதாகவும் குறிப்பிட்டிருந்தேன்.

இப்போதுதான் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. சதையம் ஒரு நொய்தான உறுப்பு. அதில் ஒரு கல் தோன்றியிருந்தது. அதாவது ஒரு கல் சியப்படிவம்தான். அதிலிருந்து புறப்படும் செமிபாட்டு நொதியங்களை உரிய இடத்திற்குப் போக விடாமல் தடுத்துக் கொண்டிருந்தது. வேறொரு நோய்க்காக அது இருக்கும் பரப்பை அண்டிய பகுதி எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. அதில் நான் அவதானிக்கவில்லை, அக்கறையோடு பார்க்கவுமில்லை. ஆனால் வைத்தியம் செய்யும் டாக்டர் சொன்னார்: சதையத்தில் நொருங்கிய கற்கள் காணப்படுகிறது என்று.

அப்படியானால், அதை நொருக்கியவர் யார்? என்னையே கேட்டுக் கொள்கிறேன். உங்களையும் கேட்கிறேன். என்னை அந்தப் பயங்கர வியாதியிலிருந்து குணப்படுத்தியது யார்? 1972 இல் கிழக்கு - மேற்கு வைத்தியத்துறைகளினால் கைவிடப்பட்ட நான் இன்று உயிரோடு நடமாடுவது எப்படி? எதனால் எனது நோய் மாறியதென்பதற்கு எந்தப் பகுத்தறிவு வாதியால் பதில் கூற முடியும்?

— தேவன் - யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம்.
27.2.82

# சிறப்புரை

## நந்தி

'தேவன் - யாழ்ப்பாணம்' என்ற புனைப்பெயரில் எழுதிய அமரர் இ. மகாதேவன் (தேவன் மாஸ்ரர்) எமது தலைமுறையின் முன்னோடி எழுத்தாளர்; கவர்ச்சி மிகுந்த பேச்சாளர்; திறமையான மொழிபெயர்ப்பாளர், ஆணித் தரமான அறிவிப்பாளர்; இப்படிப் பன்முகத் திறமைசாலி. அவரைத் தெரிந்தவர்களுக்கு அவர் கூறும் 'நான்' புரியும்.

அவர் ஒரு உடல் நோயைக் குணப்படுத்துவதற்குப் புட்டபர்த்தி சென்று, 'நான்' என்ற மனிதகுல நோய் அவரில் நலிந்த கதையைக் கூறுவது இந்த நூல்.

இது 10 வருடங்களுக்கு முன் எழுதப்பட்டது, இப்போது தான் எமக்குக் கிடைக்கின்றது. அந்த நாட்களில் பகவானின் தர்சனமும், ஸ்பர்சமும், சம்பாஷணையும் எவ்வளவோ இலகுவாக வெளிநாட்டவருக்குக் கிடைத்ததைப் படிக்கும் போது எமது மனம், 'நாமும் போயிருக்கலாமே' என ஏங்குகிறது.

பக்தியும் தத்துவமும் கொண்ட சிந்தனையை, நவீன தமிழ் நடையில் கதை போலும் ஒரு கனவைக் கூறுவது போலும் எழுத்தில் தர முடியும் என்பதற்கு இந்த நூல் சான்று. தத்துவத்தில் தொடங்கிய 'பிரயாணநூல்' பக்தியில் முடிகின்றது. ஆம், சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை - இவை மலிந்த உலகம் எவ்வளவு இனிமையானது!

நூலைப் படித்து முடிக்கும் போது நாமும் புனித புட்டபர்த்திக்குப் போய் வந்ததாக ஒரு உணர்வு மனத்தில் ஏற்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புட்டபர்த்தியில் "நான்"

இக்கட்டுரைக்குத் இத்தலைப்பு வேறு எதுவாயுமிருந்திருக்கலாம். 'கடவுளைக் கண்டேன்' என்றோ, 'கண்டறியாதன கண்டேன்' என்றோ கூட இருக்கலாம். ஆனால் இடப்பட்டிருப்பதே பொருத்தமென நான் நினைக்கிறேன். 'நான்' என்றால் அகந்தை, மமதை, அகங்காரம், தலைக்கனம், கர்வம், செருக்கு, தலைவீக்கம், ஆணவம் என்றெல்லாம் கூடச் சொல்லலாம். அந்த 'நான்' என்னிடமில்லையென்ற மயக்கத்திலிருந்த எனக்கு இப்போதும் அது கொஞ்சநஞ்சம் எஞ்சியிருப்பதாய் உணர்கிறேன். நண்பர்கள் வற்புறுத்தினார்கள். ஆகையால் இதை எழுதஆரப்பித்தேன் என்று எவ்வளவுதான் நான் அடித்துச் சொன்னாலும் என்னிடத்தில் மிச்சமாயிருக்கிற 'நான்' தான் இதை எழுதுகிறது என்று மனக்கௌளி கூறுகிறது. எது பகிரங்கப்படுத்தப்படுவதனால் சுயவிளம்பரமாகி விடுமோ, அதை எழுதுவதில் இறங்கிவிட்டேன். பலரோடும் பங்கு போட்டுக்கொள்ளக் கூடிய அனுபவமென்றாலும் 'அவர்' இதை விரும்புவாரோ என்ற அச்சம் அடிமனதில் கிளர்கிறது. உயர்திணையில் தேவரும் அடக்கம் என்பதனால் நான் பிழைத்தேன். இல்லையானால் - நெஞ்சில்கையை வைத்துச் சொல்கிறேன் - அவரைக் குறிப்பிட தமிழில் திணையில்லை. தமிழில் உயர்திணைக்கும்மேலே ஒரு திணை வகுக்கப்பட்டிருக்க வேண்டுமென்பேன். 'அவர்' என்று குறிப்பிடுவது உரிய மதிப்பை அளிக்கும் தன்மையது அல்ல. மரியாதையாகக் குறிப்பிட வேறோர் சொல் வேண்டும். இல்லையே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதை விளக்கம் தரும் உத்தமர் ஆசிரமத்தில் 'நான்'க்கு இடமேது? அதற்கு அப்பால் பட்டு இறைவன்மீது பாரத்தைப் போட்டுவிட்டு நிஷ்காமிய கர்ம யோகம் புரிய என்னுல் முடியவில்லையே! நான் கற்றவையும் என்னைச் சுற்றியுள்ளவையும் அளவுக்குமீறி 'நான்' ஐ என்னுள் வளர்த்து விட்டனவோ? வெறும் லௌகிக லாப நஷ்டங்கள் பார்ப்பவனுக்கு அந்தப் பக்குவநிலை கிட்டுவதேது? காரண காரிய விளக்கங்களுக்கு எல்லாமே உட்பட்டவை என்ற பின்னணியை அழித்துவிட முடியாதவனுக்கு அந்தநிலை சித்திப்பது எவ்வாறு? இந்த அடிப்படையில் ஏதோ தவறு இருப்பதுபோலத் தெரிகிறது. ஆனுல் விளங்காத ஒரு கலக்கநிலை, கலங்கித் தேங்கியநிலை, மனிதன் சுவடே படாத ஆரண்யமத்தியில் காணப்படும் குளத்து நீரின் அழுக்குப்போல் - அரை நூற்ருண்டு கால வாழ்க்கையில் படிந்த பாசியும் வண்டலும் - அதை நானென்ன செய்ய? ஆதலால்தான் 'நான்' மடியவில்லை.

## உனக்கு என்ன? என்ன? என்ன?

கொஞ்சக் காலமாக என்னைக் காண்பவரெல்லாம் கே. பி. எஸ். பழநியாண்டவரைப் பார்த்துப் பாடியது போல 'என்ன இந்தக் கோலம்? உனக்கு நடந்தது என்ன?' என்று கேட்கிருர்கள்.

எனக்கு ஒரு நோய், போன டிசம்பரில் என்னைப் பரிசோதித்த ஒரு டாக்டர் "ஒன்றுக்கும் பயப்படாதையும்; நாங்களிருக்கிருேம்" என்ருர். பின்னர் ஜனவரி வரை பல பரிசோதனைகளுக்கு உட்படுத்தினுர். பரிசோதனைகளின் முடிவை - அவர் சொல்லப்போவதை தனியே தாங்கிக் கொள்ளும் சக்தி எனக்கில்லை என்பதை என் உள்ளுணர்வு எச்சரித்து விட்டது. என்னுடைய அண்ணர் ஒருவரையும் அழைத்துக்கொண்டு அவரிடம் போனேன்; இரண்டுபட்ட உணர்ச்சியுடன் அவர் என்னை நோக்கினுர். அவருடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிப்பு உதட்டில் நெளிந்தது. ஆரம்பத்தில் நான் அவரைக் காணச் சென்றபோது நான் சொன்ன அறிகுறிகளிலிருந்து, எனக்குச் சொல்லாமலே தான் ஊகித்ததை பரிசோதனைகள் உறுதிப்படுத்தியிருப்பது பற்றி அவருக்கு மட்டில்லாத மகிழ்ச்சி, எடுத்த எடுப்பிலேயே இலகுவில் கண்டுபிடிக்க முடியாத வியாதியை கண்டுபிடித்தவருக்கு மகிழ்ச்சி ஏற்படுவது பற்றி நான் வருந்த முடியுமா? அந்த ஆனந்தத்தை அவர் என்னிடம் மறைக்கப் பட்டபாடு! மற்றது என்மீது தோன்றிய அனுதாபம். என்னைத்தேற்றுவது ஆற்றுவது எப்படி என்ற கிலேசம். "உங்களுக்கு எத்தனை வயது?" என்கிறார். இதை எத்தனையோ தடவை என்னிடம் கேட்டுவிட்டார். அவர் முன்னால் விரிந்துகிடந்த என் ஆஸ்பத்திரி சிட்டையிலும் என் வயது எழுதப்பட்டிருக்கிறது. என்னை எப்படியாவது காப்பாற்றிவிடுவது, என்னைப் பழைய மனிதனுக்கிவிடுவது என்ற விசுவாசமான ஆர்வத்தோடு என்னைப் பரிசோதித்த அவர் கையை விரிக்கவேண்டிய கட்டம். அதற்குப் பீடிகை என் வயதைப் பற்றிய வினா. இன்னும் எத்தனை நாள் இருக்கப் போகிறீர்? அதற்கிடையில் இதற்கு எதற்கு வைத்தியம்? என்பதுதான் அர்த்தம், 136 றுத்தல் எடையிருந்த நான் 100 றுத்தலாக குறைந்தேன்—இரண்டு மாதங்களில்,

## பான்கிறியாடைட்டிஸ் கைவிட்ட கேஸ்

எனக்கு சதையம் என்கிற உறுப்பில் ஒரு கல் உண்டாகியிருக்கிறது. ஏனைய உறுப்புகளில் அப்படி உண்டானல் கல் என்பது பொருந்தும்; ஆனல் சதையத்தில் உண்டாவதை கல் என்று சொல்வதில்லை, வைத்திய பரிபாஷையில் அது ஒரு கல்சியப் படிவம். சதையம் என்ற உறுப்பு மீனின் சினையைப்போல நொய்தானது இலைபோன்ற வடிவமுடையது. இலையின் நரம்புகள் போலவே அதன் குழாய்கள், இலையின் காம்பு போன்ற பெரிதான, பிரதான குழாய்மூலம் சதயம் உற்பத்தி செய்யும் அமிலங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொதியங்கள் (புரதம், எண்ணெ, கொழுப்பு முதலியவை சமிபாடடைவதற்கு அத்தியவசியமானவை) சிறுகுடலை அடையும்; எனக்கு அக்குழாயின் வாயில் இது 'நந்தி' யாக குந்திக்கொண்டிருக்கிறது. சதையம்தான் நீரிழிவைத் தடுக்கும் இன்சுலினையும் உற்பத்தி செய்கிறது. ஆனல் நல்ல வேளை! அதுமட்டும் இக்குழாய் மூலம் கடத்தப்படுவதில்லை.

சரி, ஒரு கல்தானே! என்ன செய்கிறது? இருந்துவிட்டுப் போகட்டுமே என்று சும்மா இருக்க முடிகிறதா? எப்போது, ஏனென்றில்லை — வயிற்றின் குறுக்கேயிருக்கும் பெருங்குடல் பகுதியில் வலிக்க ஆரம்பிக்கிறது. உள்ளே மிகக்கடினமான பறையொன்று உருளுவதும் திரளுவதும போல இருக்கிறது. முதுகெலும்பின் இரு பக்கங்களிலும் தாங்கமுடியாத உளைச்சல். நெற்றியிலிருந்து குடம், குடமாக வியர்வை. இதயத்திற்கு கீழேயிருக்கிற சவ்வாலான மென்தகடு 'விண், விண் என்று' வலிக்கிறது. மரணுவஸ்தை என்று சொல்வதை நான் அனுபவித்ததில்லை. ஆனல் இவ் வேதனை அதிலும் மிக மோசமானது என்று உறுதியாகச் சொல்வேன். இந்தவலி சிலமணி நேரத்தில் மறைவதுமுண்டு. சில நாட்களுக்குத் தொடர்ந்து இருப்பதுமுண்டு அடிக்கடி ஏற்படுவதுமுண்டு. பலநாட்களுக்கு உபத்திரவம் தராமல் இருப்பதும் உண்டு. மேனுட்டு வைத்தியம், ஆயுர் வேதம், புட்டபர்த்தி - எதிலாவது இதைத்தீர்க்கும் அற்புதம் இருக்காமலா போகும்? இது ஒரு நப்பாசையா? நிவாரண வேட்டையைத் தொடங்கினேன்;

சத்திர சிகிச்சையினுல் இக்கல்லை அகற்றிவிடலாம். மூன்று மணி நேரம், மூன்று வார ஆஸ்பத்திரிவாசம். மூன்று மாத பராமரிப்பு, ஐந்து அல்லது ஆறுயிரம் ரூபா - விஷயம் முடிந்துவிடும். ஆனல் விளைவு? நன்மை பிறக்குமா? நிலைமை மோசமாகுமா? எதற்கும் உத்தரவாதமில்லை, உபத்திரத்தை விலைக்கு வாங்குவதா? மேனுட்டு வைத்தியத்தில் இதைக் கரைக்க மருந்தில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுர் வேதத்தில் வேறு உறுப்புக்களில் உண்டாகும் கற்க ளைக் கரைக்க ஔஷதங்கள் இருந்தும் சதையத்தில் முன் பின் அனுபவம் பரந்து பட்டதாயில்லை. இலங்கையின் வைத்திய வரலாற்றிலேயே விரல்விட்டு எண்ணக்கூடிய சில ருக்குத்தான் இந்த உபாதை உண்டாகியிருக்கிறது. எல் லோருக்கும் கிடைக்கும் பாக்கியமல்ல! இதிலேயும் ஒரு "நான்"

அது நிற்க, டாக்டர் படம் வரைகிறார், விளக்குகி றார்: உணவுகள் பற்றியெல்லாம் சொல்கிறார். எனக்கு அவற்றைக் கிரகிக்க வேண்டும் போலிருக்கவில்லை. பின்னர் கூடவேயிருந்த அண்ணரிடம் கேட்டறியலாம் என்று பேசாம லிருந்து விட்டேன். "இதுக்கு அவசரப்பட்டு நாங்களே தும் செய்வதில்லை, ஆனால் பயந்துவிடாதையும். விஷயம் முற்றினால் நாங்கள் பார்த்துக்கொள்வோம் இதோடை காலந்தள்ளலாம். எத்தனைபேர் அப்படியிருக்கிறார்கள்? அவ சரப்பட்டு கிழிக்கத் தேவையில்லை வலி ஏற்படும் போது உபயோகிக்க சில மருந்துகள் எழுதித் தருகிறேன். ஒன்றுக்கு அடிமைப்படாமல் மாற்றி மாற்றி உபயோகிக்க லாம். எத்தனை மாத்திரை ஒரு வேளைக்கு தேவைப்படு மென்பதை நீரே நிர்ணயித்துக்கொள்ள முடியும்."-இவ் வார்த்தைகள் அவ் வைத்தியருக்கு என் மீதிருந்த அன்பைக் காட்டின. ஆனால் தென்பைக் கொடுக்கவில்லை. முடிவு இப் படித்தான் ஏதோ ஒன்று என்று எதிர்பார்த்தேன்; அத னால் எனக்கு சூரியன் அஸ்தமிக்கவுமில்லை. பூமி இருளவு மில்லை; கால்களுக்கு கீழேயிருந்து அது நழுவிவிடவுமில்லை.

இலகுவில் மசிந்து விடக்கூடிய ஆசாமியல்ல நான்; இதன் பின் படங்கள், பத்திரிகைகள், வைத்திய நூல்கள் ஆகிய யாவற்றிலும் சதையத்தைப்பற்றி எதைக்கண்டா லும் வாசித்தறிந்தேன். கண்ட வைத்திய நண்பர்களிட மெல்லாம் இதைப்பற்றியே குடைந்து. குடைந்து கேட்ட றிந்தேன். முன்பு இந்நோய் வாய்ப்பட்டு சத்திரசிகிச்சை செய்து கொண்டவர்களையும் சந்தித்தேன். ஒருவராவது ஆப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேஷன் செய் என்று ஆலோசனை கூறவில்லை. ஒரு நாள் என் வைத்திய நண்பர் ஒருவருடன் இதைப்பற்றிப் பேசுகையில், நானே அதிகம் பேசினேன். அவருக்குத் தெரியாத விஷயங்களையும் நான் அலச ஆரம்பித்ததும் அவர் ''வைத்திய சங்கத்தில் இதைப்பற்றி ஒரு கட்டுரை வாசிக்கும் தகுதி பெற்றுவிட்டீர்கள்'' என்றார்; எப்படி 'நான்'?

''இதுக்கு ஏன் பயப்படுகிறீர்? இங்கிலாந்துக்குப் போகலாம், மொஸ்கோவுக்குப் போகலாம், சீனுவுக்குப் போகலாம்'' என்று சொன்ன நண்பர்கள் ஒரிருவரல்ல. நான் லட்சாதிபதியல்ல, அரசியல்வாதியுமல்ல. அங்கெல்லாம் போக எனக்கு வாய்ப்பில்லை என்பது எனக்கல்லவோ தெரியும். வீட்டைக் காணியைச் சுட்டு, வித்து என் ஆரோக்கியத்தைப் பேணலாம், உயிரைக் கட்டிக்காக்கலாம் என்று சூதாடி என் குடும்பத்தை நடுத்தெருவில் பிச்சைக்காரராய் நிறுத்த நான் விரும்பவுமில்லை, நினைக்கவுமில்லை. உலகத்தோடு கணக்கு வழக்கை முடித்துக் கொள்ள போதிய அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. போதாதா? விரலுக்குத் தகுந்த வீக்கமன்றோ இருக்கவேண்டும்!

இடையே, லூட்ஸுக்கு (பிரான்ஸ்) போகலாம், செல்வச்சந்நிதிக்குப் போகலாம், புட்டபர்த்திக்குப் போகலாம் என்று சொன்னவர்களுமுளர். என் வைத்தியர் எழுதிக் கொடுத்தவை யாவும் ஒருவகை மயக்க மருந்துகள்தாம், அவற்றினாலும் நிவர்த்தியில்லையென்று காணும் போதெல்லாம் ஏனென்று கேட்காமல் 'பெதடீன்' ஊசி ஏற்றிய வைத்திய நண்பர் ஒருவர் - அவருக்கு ஆயுர்வேதமும் கைவந்த கலை, அவர் ஒரு சாயிபாபா பக்தர் கூட—''இவையெல்லாம் நம்பிக்கை, விசுவாசம் ஆகியவற்றினாலும் சரிவரும். ஒன்றுக்கும் யோசியாதையும்'' என்பார். அவர் என்னைக் கட்சி சேர்த்தார் என்று சொல்வது அபத்தம். எதன் மீது எனக்கு நம்பிக்கையுண்டோ, அத்தியானம் எனக்கு நிவாரணம் தரும் என்ற தொனி மட்டும்தான்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் துளிர்விட்ட நம்பிக்கை

என்னை முதலில் பரிசோதித்த வைத்தியர் கூறியது அறுதி என்பது எனக்குத் தெரியும், ஆனால் ஆசை யாரை விட்டது? தென்கிழக்காசியாவிலேயே பிரபலமான ஒரு சத்திர வைத்தியரைக் காணக் கொழும்புக்குப் புறப்பட்டேன். ஆயுர் வேதமும் ஆங்கில வைத்தியமும் தெரிந்த நண்பர் "ஏதாவது ஆபரேஷன் செய்வதாக முடிவு செய்தால் எனக்குச் சொல்லியனுப்பும். நான் உற்சாகமூட்டுவதற்காகவாவது பக்கத்தில் வந்து நிற்கிறேன்" என்றார் இதற்கிடையில் என் சக ஆசிரியர் ஒருவர் பெருந்தொகைப் பணத்தை என் கையில் கொடுத்து "ஆபரேஷன் செலவு மீதி எவ்வளவு என்று எழுதும். நான் பொறுப்பு" என்றார்- இன்னொருவர் "நானும் என்னாலானதைச் செய்யவேண்டும். தேவை ஏற்படும்போது கேட்கத் தயங்காதே" என்றார். கடவுள் மனித உருவில் எங்கெல்லாம் இருக்கிறார்? அவரை அடையாளம் காண்பதுதான் கஷ்டமாயிருக்கிறது. கொழும்பில் மீண்டும் எக்ஸரேக்கள் - சோதனைகள். வாங்கின பணத்துக்கு வஞ்சகமில்லாமல் உழைக்கும் நிறுவனங்கள் மூலம், எனக்கு அலுப்புத்தொட ஆரம்பித்தது, என்னை முதலில் பரிசோதித்த டாக்டருக்கு கொழும்பு செல்லும் விஷயத்தைச் சொல்லவில்லை. அவராகக் கேள்விப்பட்டு என் நண்பர் ஒருவர் மூலம் "சோதனைகள் செய்யட்டும். ஆலோசனை கேட்கட்டும். ஆனால் அதை ஒருவரையும் தொடவிட வேண்டாம்" என்று கூறி அனுப்பினார். அவர் வைத்திய நிபுணத்துவம் சந்தேகத்துக்கு இடமில்லாதது. அதற்குமேல் என்மீது அவர் காட்டிய அக்கறை அளவிடமுடியாதது. கடைசியாக நான் காண நினைத்த ரணவைத்தியரைக் கண்டேன். "அகற்றிவிடலாம்" என்றார். அடுத்த நாளே தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதி பெறும்படி அறிமுகக் கடிதமும் கொடுத்தார். அமெரிக்காவில் ஆபரேஷன் செய்து பிறகு தன்னால் ஆபரேஷன்செய்யப்பட்ட இலங்கையர் ஒருவரின் எக்ஸ்-ரேக்களைக் காண்பித்தார். "நான் யாழ்ப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணம் திரும்பச்சென்று ஆயத்தங்கள் செய்துகொண்டு வருகிறேன்'' என்றேன். எனக்கு நாட்கள் பலவானதுபற்றி சலிப்பு, என் லீவு பற்றிய நினைப்பு. ''சரி'' என்ருர், திரும்பவும் யாழ்ப்பாணம் வந்தேன்:

கண்டவர்கள் எல்லோரும் கரிசனையோடு விசாரித்தார்கள். இங்கே இவ் வியாதியை முதலில் கண்டுபிடித்த டாக்டரின் முகத்தில் விழிக்காமல் ஒளித்துத்திரிந்தேன் ஒரு நாள் எதிர்பாராதவிதமாக அவர் என்னைக்கண்டுவிட்டார் காரைவிட்டு இறங்கியே வந்தார். நான் கூனிக் குறுகினேன். ''கொழும்பில் என்ன சொன்னூர்கள்?'' என்று கேட்டார். நடந்ததைச் சொன்னேன்.

''ஐசே, நானும் ஒரு சர்ஜன். இதே ஒப்பரேஷனை நாலைந்து பேருக்குச்செய்துமிருக்கிறேன். கடைசிவரை செய்யாதையும்'' - அப்பீல் இல்லாத பேச்சு. கண்டிப்பான தொனி. செய்யவா, விடவா என்று அலைபாய்ந்ததெல்லாம் ஓய்ந்தது. அதில் கைவைப்பதில்லை என்பது உறுதியாயிற்று.

''பாபாவிடம் உங்களுக்கு நம்பிக்கையுண்டா? ... நீங்கள் அவரை தியானியுங்கள்'' என்று ஒரு நண்பர் எழுதினூர். ''நீங்கள் எத்தனை பேருக்கு உதவி செய்திருக்கிறீர்கள் ஒரு நிதி சேர்ப்போம். வெளியூரில் இதற்கு வழிவகையில்லாமலா இருக்கும்?'' என்ரெருரு நண்பர் முன்வந்தார், ''வட்நொன் சென்ஸ்! உனக்கு வைத்தியவசதியில்லாமை ஒண்டு நடந்தா, அது ஒரு தேசிய நட்டமல்லவோ?'' என்ருர், இலகுவில் உணர்ச்சிவசப்படும் கலைஞர் ஒருவர், என்தலை ஒருசுற்றுப் பெருத்தது, எப்படி 'நான்'? ஈழநாடு என் நோய்பற்றி சாங்கோபாங்கமாக குறிப்பிட்டு எழுதியது; விசாரிப்பவர் தொகை பெருகியது.

பாபாவின் பஜனைகள் நடப்பதை அறிவேன்; போனதில்லை. டாக்டர் சோமசுந்தரம் வீட்டில் படத்திலிருந்து வீபூதி ஊற்றெடுக்கிறது என்று கேள்விப்பட்டு போய்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்திருக்கிறேன். இந்துக்கல்லூரியில் சாயிபாபா சமித்தியினர் ஒரு கூட்டம் வைத்து படம் காட்டியபோது ஒழுங்குகள் செய்வதில் உதவிகள் செய்தேன். அதைக்கொண்டு சாயி பக்தன் என்று முடிவு கட்டலாமா?

"ஐயோ, பாவம்!" என்று மற்றவர்களின் இரக்கத்திலும், அனுதாபத்திலும் எவ்வளவு காலம் வாழ்வதென்று கூச்சமடைந்தேன். எனக்கு இவற்றில் நம்பிக்கையில்லை என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. சமய விஷயங்களிலும் அவ்வாறே, இந்துவாய் பிறந்தேனென்று பெருமையடைகிறேன், ஆனால் ஆசாரம், அனுஷ்டானம், நோன்பு, பூஜை, புநஸ்காரம் என்று மினக்கெடுவதில்லை: தூய்மையான வாழ்வு வாழ்கிறேன்; பிறருக்கு உதவுகிறேன். யாருக்கும் கெடுதல் செய்ததில்லை-இவற்றில் எனக்கு நிம்மதி

இந்துக்கல்லூரிக் கூட்டத்தைக் குழப்ப முன்னணியில் நின்ற ஒருவரைப் பின்னர் கண்டு வன்மையாகக் கண்டித்திருக்கிறேன். "அவர்கள் புனிதமானது என்று கொண்டாடுவதை அவமதிக்க உனக்கு உரிமையில்லை: நீ வேறிடத்தில் கூட்டம் வைத்து எதிர்ப்பிரசாரம் செய்வதும் கண்டிப்பதும் வேறு விஷயம். அங்கே வந்து கூச்சல் போட்டு சலசலப்பை ஏற்படுத்தினால் அவர்கள் மனத்தை மாற்றி விடலாம் என்று நினைப்பது முட்டாள் தனம். உன்னையே இழிவுபடுத்திக் கொண்டாய்" என்று நான் கூறினேன்: "அப்படியானால் உங்களுக்கும் இவற்றில் நம்பிக்கையா?" அவருடைய கேள்வி. நிதான புத்திபடைத்தவன் நான் என்று தான் கருதுவதற்கு அத்தாட்சி. "நெஞ்சில் கையை வைத்துச் சொல்வதானால் உண்டு என்று நான் சொல்ல முடியாது. ஆனால் தர்க்க ரீதியாகவும், விஞ்ஞான ரீதியாகவும் எதையும் ஆராயும் திறன்படைத்த அத்தனை பேரும் நம்புவதை அலட்சியம் செய்யவும் முடியவில்லை" -இது என் பதில். தன் நடத்தையால் நான் புண்படவில்லை என்பதில் அவருக்குத் திருப்தி;

2-புட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் தீராத வியாதி ஒன்றினால் பீடிக்கப்பட்ட ஒருவர் என்னைக்கொண்டு ஒரு கடிதம் ஆங்கிலத்தில் பகவானுக்கு எழுதுவித்தது ஞாபகத்துக்கு வந்தது. நானும் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் முகவரியை வாங்கி ஒரு கடிதம் வரைந்தேன். ''தீவிர கடவுள் பக்தன் என்று சொல்லிக்கொள்ளமாட்டேன். ஆனால் கடவுளுக்குத் துரோகமான செயலைச் செய்தறியேன். இன்னும் சில நாள் வாழவிரும்புகிறேன்... வேதனையிலிருந்து விடுதலை... தங்களைப்போன்ற புனிதர்களின் பிரார்த்தனையில் என் துயரமும் துடைக்கப்படும் மார்க்கமுண்டானால் நான் பாக்கியசாலி'' இப்படி என்னென்னவோ எழுதினேன். பகவானை எப்படி அழைப்பது? ''யுவர் ஹோலிநெஸ்'' என்று தொடங்கியிருந்தேன். மனிதனாலும், மனித அறிவாலும் கைவிடப்பட்டபின், ஏதாவது அதிசயமொன்றினால்தான் காப்பாற்றமுடியும் என்ற நிலைக்குத்தள்ளப்பட்டவர்கள்தான் பாபாவை நினைக்கிறார்களோ?

அப்புறம் என் கடமைகளில் மூழ்கிவிட்டேன். என் கல்லூரியின் அதிபரும் சக ஆசிரியர்களும் காட்டிய அனுதாபமும் அளித்த சலுகைகளும் என்னை நெகிழச் செய்துவிட்டன. இத்துணை அன்பையும் அனுபவிக்க நான் தகுதியுடையவன்தானா என்ற சந்தேகமே என்னை அலைக்கழித்தது; மயக்க மருந்தின் சக்தியிலிருந்து பூரண விடுதலையடையுமுன்னர் கூட வேலைக்குச் சென்றிருக்கிறேன். என்னுடைய பர்ஸுக்குள் எந்நேரமும் மயக்கவில்லைகள் இருக்கும். என்றைக்காவது வேலூர் மருத்துவமனைக்குச் சென்று ஆலோசனை கேட்போம். அதுவும் கையில் நாலு காசு மிஞ்சினால் பார்ப்போம். அதுக்கும் அவசரமொன்றுமில்லையென்று இருந்துவிட்டேன்.

## யாத்திரை ஏற்பாடுகள்

இப்பொழுது நினைத்துப் பார்த்தால் எல்லாமே எப்படி நடந்தது என்று ஆச்சரியமாயிருக்கிறது திடீரென ஒருநாள் ஒரு நண்பர் ''வாருங்கோவன், விடுதலைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருக்கா இந்தியாவுக்கு போட்டுவருவம். வேலூருக்கும் போகலாம். அதாலே சாயிபாபாவிடமும் போட்டு வரலாம்'' என்றார். ''உதுக்கெல்லாம் ஆரிட்டைக் காசு கிடக்கு?'' என்று உதறிவிட்டேன். ''இப்ப நானென்ன வைச்சிருக் கிறேன்? அதைப்பிறகு பார்ப்பம். இப்ப இந்தாருங்கோ. பரதேசம் போறதுக்கு உத்தரவு விண்ணப்பபடிவம். நிரப் பித்தாருங்கோ. நான் வெல்றன்'' என்றார். அது முடிந்தது. இதைப்பற்றி எதுவுமறியாத இன்னொரு நண்பர் ஒருநாள் வீடுதேடி வந்தார். ''உங்களை நான் வேலூருக்கு கூட்டிக் கொண்டு போகவேணும். அங்கை எனக்கு ஆக்களுமிருக் கினை. இந்த விடுதலைக்கை பாப்பம்'' என்று ஒரு படி வத்தையை நீட்டினார். பிரயாண அனுமதிக்கு விண்ணப் பித்திருப்பதாகக் கூறியதும் 'பாஸ்போர்ட் இருக்கோ?' என்று கேட்டார். வருகிற வருஷம் வரை செல்லுபடியாகக் கூடியதாக இருந்தது. எடுத்துக் கொடுத்தேன். ''எக்சிட் பெர்மிட் விண்ணப்பங்களை நிரப்புங்கோ'' என்று அவற்றை வாங்கிக்கொண்டு கச்சேரிக்குச் சைக்கிளில் சென்று ஒப் படைத்துவிட்டு. ''விசாவுக்கு மனு எழுதித்தாருங்கோ'' என்று உடனேயே திரும்பி வந்தார். ''நீங்கள் சிரமப்பட வேண்டும். கொழும்பிலிருக்கும் என் சகோதரிக்கு அனுப் பலாம்'' என்றேன். அவர் விடவில்லை. ''முகவரியைக் கொடுங்கோ'' என்றார். பெற்றுக்கொண்டு பதிவுத்தபாலில் அனுப்பிவிட்டு விமானக் காரியாலயத்துக்குச் சென்று தற் காலிகமாக என் பெயரை ஒரு தேதிக்குப் பதிவு செய்து விட்டு வந்தார். நான் கையைக் கட்டிக்கொண்டிருக்கிறேன். கருமங்கள் யாவற்றையும் யார் யாரோ, தாமாக முன் வந்து செய்கிறார்கள். இப்படிவங்கள் யாவற்றிலும் இந்தி யாவில் என் செலவினத்துக்குப் பொறுப்பான இருவரை குறிப்பிட வேண்டும். எனக்கு இந்தியாவில் நண்பர்களி ருந்தும் நான் வெவ்வேறு படிவங்களில் வெவ்வேறு சோடிப் பெயர்களை யாரோ சொல்ல எழுதித் தொலைத்து விட் டேன். அவர்களையும் தெரியாது. பெயர்களும் ஞாபகத்தி லில்லை. அதனால் நேர இருந்த அநர்த்தம்.

எக்ஸிட் பெர்மிட்டுக்காக விசாரணைக்கு உட்படுத்தப் டேன். இந்தியாவில் என் பிணையாளர் பெயரை என்னல் கூறமுடியவில்லை. அத்துடன் நேர்த்திக்கடனுக்காக யாத்திரை போகிறேன் என்று விண்ணப்பத்தில் கூறியிருந்த எனக்கு எங்கே எந்த ஸ்தலத்துக்கு என்று திட்டவட்டமாகக் கூற முடியவில்லை. பொலிஸ்காரருக்கு பொய்சொல்லுவது கஷ்டந் தான். எனக்கு எக்ஸிட் பெர்மிட் அரோகரா என்று தான் நினைத்தேன். வேருெரு நண்பர்தான் வைத்திய அதிகாரியிடம் செல்கையில் என்னையும் கூட்டிச் சென்று அம்மைப்பால் கட்டி, நெருப்புக்காய்ச்சல் ஊசியும் போடுவித்தார். கூப்பனை யும் காரியாதிகாரி பணிமனையில் ஒப்படைத்தோம். எல்லாம் கிடைத்தது. எக்ஸிட் பெர்மிட்டைக் காணும். கையில் பணத்தையும் காணும். நாங்கள் பிரயாணம் பண்ண எதிர்பார்த்த திகதியும் தாண்டிவிட்டது. பொலிஸில் எனக்கிருந்த அறிமுகங்களைப் பயன்படுத்தவில்லை. நான் இந்தியாவுக்குப் போகவேண்டும். ஏன்? எனக்கே தெரிய வில்லை. வேலூர் விஷயத்தை மட்டும் வெளிப்படையாகச் சொல்லமுடியாது. நான் ஒரு கள்ளக்கடத்தல்காரனுமல்ல, அரசியல்வாதியுமல்ல. எப்படியோ உரிய விசாரணைகள் முடிந்து எக்ஸிட் பெர்மிட் கையில் கிடைக்கிறது. "இந்தா ருங்கோ, ரிக்கற்றை வாங்குங்கோ" என்று 300 ருபாவைக் கைக்குள் திணிக்கிருர் என் நண்பர். "பொறுத்து நானே வாங்குகிறேன்" என்று தயங்குகிறேன். "பிறகு தாருங்கோ, இப்ப அலுவல் முடியட்டும்" என்று வற்புறுத்துகிருர். அதுவும் அணைவைப் பயன்படுத்தி விமானத்தில் சீட் எல் லாம் ஆச்சு.

## புட்டபர்த்திக்கே தான்

முதல் நாளிரவு வரைக்கும் போவதா, போவதில்லையா என்று தயங்கிக்கொண்டிருந்த நான், பிரயாணதினத்தன்று பெட்டியை அடுக்கினேன். என் உறவினர் ஒருவர் கார் அனுப்பினுர். என் நண்பர் ஒருவர் கார் அனுப்பினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னோடு பிரயாணம் பண்ண இருந்த நண்பர்கள் காரோடு வந்தார்கள். எல்லோருக்கும் என்னை நாடு கடத்துவதில் இருந்த அக்கறை! கொழும்புக்குச் செல்லும் போது கண்கலங்கினேன். ஆனால் இப்பயணத்தின்போதோ ஆனந்தமாகச் சிரித்தபடி உல்லாச யாத்திரை புறப்படு கிறேன்.

பலாலிக்குச் செல்லும் வழியில் என் மாமியார் வீடு: அங்கே இறங்கி ஒரு வார்த்தை சொல்லாமல் போவதா? என்னைக் கண்டதும் "சும்மா வேலூர், கீலூர் என்று அலைஞ்சு திரியாதையுங்கோ. புட்டபர்த்திக்குப் போட்டு வாங்கோ" என்றார். அவர் சாயிபாபா பத்தர் அல்லர்; பாபாவைப் பற்றி அவர் படித்தறிந்திருப்பார் என்று சொல்லவும் முடியாது; நான் இந்தியாவுக்குப் போகிறேனே, அப்படியானால் நோக்கமென்ன என்பதும் அவர்களுக்குத் தெரியாது. பிரயாண ஆயத்தங்கள் செய்கிறேன், போவது நிச்சயமில்லை என்பதுமட்டுந்தான் அவர்களுக்குத் தெரியும். பேச்சோ உத்தரவிடுவது போல, நிச்சயமாகக் கீழ்ப் படிவேன் என்ற நம்பிக்கையோடு.

இவ் விவகாரத்தில் நான் எடுக்கவேண்டிய முடிவுகள் யாவும் பிறராலேயே எடுக்கப்பட்டவை என்பது தெளி வாயிருக்கிறது. புட்டபர்த்தி யாத்திரை உறுதிப்படுத்தப் பட்டது. நீண்ட நெடுந்தூரம் .. எத்தனை மைல்கள், இன் னும் எத்தனை நாட்கள்? 'நான்' விரும்பும் வேலூர் விஜயம் இடையே. முதல்நாளும் என்னுடைய வைத்திய நண் பரைக்காண முயற்சித்து தோற்றபின் தொலைபேசியில் தொடர்புகொண்டபோது, "வேலூருக்கு போகில் போம். கட்டாயம் புட்டபர்த்திக்குப்போம்; பகவான் இப்போது அங்கேதான் நிற்கிறார்" என்ற தகவலையும் தந்தார். என்னைச் சுயமாகச் சிந்திக்க எவரும் அனுமதிக்கவில்லை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித மண்ணில் கால்வைத்தேன்

இலங்கையில் கஸ்டம்ஸ் பெரிய கஷ்டம் ஆக இருக்க வில்லை. இ: போ. ச. பஸ் போல தாமதமாக புறப்பட்ட விமானம், சௌகரியக் குறைவினால் வியர்த்துக் கொட்டியது. இந்திய கஸ்டம்ஸ்—"என்னென்ன இருக்கு?" "உங்களுக்கு எவை பற்றி அக்கறை?" - ஒரு பட்டியலை ஒப்புவித்தார். அவற்றுள் சில பொருட்கள் என்னிடமிருந்தன. ஒப்புக்கொண்டேன்.

"புதிய பான்டஸ்?"

"ஆம். ஒன்று"

"யாருக்காவது பிரசண்டா?"

"இல்லை. என் உபயோகத்துக்கு?"

சற்று யோசித்தார். இலங்கையிலிருந்து வருகிறவர்கள் இங்கேயல்லவா புதிசாகத் தைக்கிறார்கள். இது என்ன ஜன்மமோ என்று நினைத்தாரோ? சரியென்றார்.

மூட்டை முடிச்சுடன் வெளியேறினேன். திருச்சி சந்திப்புக்கு வந்ததும் 60 சதத்துக்கு திராட்சை, 25 சதத்துக்கு அப்பிள். குவியல் குவியலாக பம்பாய் வெங்காயம், தானிய வகைகள் கொஞ்சம் பொற்றுமையாயுமிருந்தது.

இனி வழியில் நடந்தவற்றைக் கூறிக்கொண்டிருப்பதில் வாசகர்களுக்கு அக்கறையிருக்காது. ஆயினும் புட்டபர்த்திக்கு போக அனுசரணையான தூண்டுகோல்களை மட்டும் குறிப்பிட்டுவிட்டு அந்தப் புனித பூமிக்கு எல்லோரையும் அழைத்துச்சென்று விடுகிறேன். இனிமேலும் சுய புராணம் பாடி பொறுமையைச் சோதிக்கவில்லை. திருச்சியில் இரண்டு நாள் என் நண்பர் ஒருவரின் வேலை காரணமாக நின்றோம். அங்கிருந்து நேரே வேலூர் போக விரும்பினேன். அங்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு நண்பர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாளை நீங்கள் போவதற்கு நிச்சயமாக ஏற்பாடு செய்கிறேன்'' என்ருர். பண உதவிதான் ஏற்பாடு. அவர் சொன்ன வாக்கைக் காப்பாற்றிஞர். ஒருநாளிரவு பிரயாணம்— ரூபா 12/- க்கட்டணம். சென்னைக்கு பஸ்ஸில் சென்ருேம். அங்கே வேலூருக்குப் போக பணம் தந்த இன்னெருநபர் ''பின்னர் தேவைக்கு நான் வேலூரில் கொண்டுவந்து தருகிறேன்'' என்று வழியனுப்பி வைத்தார். இரவு 11 மணி. பங்களூர் பஸ்ஸில் ஏறி இரவு 2 மணிக்கு வேலூரில் இறங்கினேன். மறுநாள் மாலையே வேலூரில் எதிர்பார்த்ததுக்கு மாருக என் அலுவல் முடிந்தது. மாலையே நண்பர் வந்தார். பணமும் தந்தார். அன்றிரவே இரவு 2 மணிக்கு பங்களூர் பஸ்ஸில் ஏறினேன், ஒரு செவ்வாய்க்கிழமை காலை 8-30 மணிக்கு பங்களூரில் இறங்கினேன். ஒரு வியாழக்கிழமை புட்டபர்த்தியில் நின்ருல் போதும் என்று திட்டமிட்ட நான் எனக்கு புனிதத்துவம் உடைய வெள்ளியும் அங்கே நிற்க திட்டமிட்டநான்-எக்ஸிட் பெர்மிட் பெறுவதில் ஏற்பட்ட தாமதத்தாலும் விமான சீட் திரும்பி வருவதற்கு கிடைக்காததாலும் அதற்கு மேல் நிற்பது அசாத்தியம். ஒரு நாள் முன்னதாகவே பங்களூர் வந்துவிட்ட நிம்மதியில் ஒரு ஹோட்டலில் படுத்துறங்கினேன்.

## சாயிபாபாவைத் தெரியாத பங்களூர் வாசி

சென்னையில் ஒரு மலையாள கத்தோலிக்க நண்பரின் முகவரியை இலங்கையில் ஒரு நண்பர் கொடுத்திருந்தார். அங்கே விசாரித்தபோது அவர் பங்களூருக்கு மாறிவிட்டதாகக் கூறி அவருடைய முகவரியையும் தொலைபேசி இலக்கத்தையும் அவ் வீட்டுக்காரர்கள் கொடுத்தார்கள். அவரை எனக்கு முன்பின் தெரியாது, அவர் பெயர் தொமஸ், எதற்கும் தொலைபேசியில் அழைத்தேன். ''இன்னுருடைய நண்பர்'' என்று என்னை அறிமுகப்படுத்திக்கொண்டதும் 'எங்கேயிருக்கிறீர்கள்? எப்போது ஓய்வாக இருப்பீர்கள்?'' என்று விசாரித்தார், ''இப்போது சும்மாதானிருக்கிறேன்'' என்றதும் காரை எடுத்துக்கொண்டு வந்து அழைத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று வீட்டில் விருந்து வைத்தார். 100 ரூபாவைத் தூக்கி கையில் திணித்தார் — என் இலங்கை நண்பர் எனக்குத் தெரியாமல் செய்த உதவி. காரியாலயத்துக்கு அழைத்துச் சென்ருர். அவருடைய சக ஊழியரான குமாரராஜா என்ற இளைஞரிடம் எனக்கு உதவும் நோக்கோடு சாயிபாபா, புட்டபர்த்தி பற்றி விசாரித்தார். அவர் தனக்குத் தெரிந்தவற்றையெல்லாம் கூறிவிட்டு கையில் காகிதத்தையும் பென்சிலையும் எடுத்துக்கொண்டு தொலைபேசியில் தன் அனந்தப்பூர் நண்பர் ஒருவரிடம் மிகவும் விரிவாகச் சகல விவரங்களையும் கேட்டறிந்து குறிப்புகளை என் கையில் வைத்தார்.

பங்களூரிலேயே 'வைட்பீல்ட்' என்னுமிடத்தில் சுவாமி நிற்பது உண்டு. ஆனால் இப்போது அவர் புட்டபர்த்தியில் தான் நிற்கிருர். அங்கே போக தனியார் பஸ் ஒன்று மாத்திரமே உண்டு. கலாசிப் பாளையம் பஸ் நிலையத்துக்கு 12-30 மணிக்கு வந்து 1-30 மணிக்கு அது திரும்ப புட்டபர்த்திக்கு புறப்படும். வேறெவ் வழியாலும் புட்டபர்த்திக்குச் செல்வது சிரமம். பங்களூரிலிருந்து அது கிட்டத்தட்ட 108 மைல். புட்டபர்த்தியில் தங்க, உண்ண வசதிகள் உண்டு. அது கன்னடப் பிரதேசமல்ல. ஆந்திராவைச் சேர்ந்தது. ஓடுகிற ஒரே பஸ்ஸும் எஸ். ஆர். எஸ். என்ற ஆந்திர நிறுவனம். அவர்களுக்கு பங்களூரில் காரியாலயம் கூட இல்லை...இப்படி சகல விவரங்களும், நானுகக் கேட்காதவை.

## இடங்களைக் காட்டி

என் புதிய நண்பரின் டிரைவர் கலாசிப்பாளையம் பஸ் நிலையம், அரசினர் பஸ்நிலையம் ஆகியவற்றுக்கெல்லாம் அழைத்துச் சென்று இரண்டொரு விசாரணையும் செய்த பின் என் ஹோட்டலில் கொண்டுபோய் விட்டார். இரவு கால் நடையாக கடைத்தெருவைச் சுற்றிப் பார்த்த பின் நன்ருகப் படுத்துறங்கினேன். பெரிய விஷயம் என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றால் இடையிடையே என்னை இலங்கையில் தொந்தரவு பண்ணிய வியாதி இந்தியாவில் கால் வைத்ததிலிருந்து தலைகாட்டவில்லை,

'நான் நம்பியிருந்த மயக்கவில்லைகளைக் கொண்டுவர மறந்துவிட்டேன், பகவானின் அனுக்கிரகம் எனலாமோ? புறப்பட்ட வேளையிலிருந்தே எனக்குக் கவசம் அளித்தாரோ?

காலையில் ஒரு ஓட்டோ ரிக்ஷாவில் கலர்சிப்பாளையம் பஸ் நிலையத்துக்கு சென்றேன். என் பெட்டியைச் சுமக்க? வந்த பையனொருவன் ''புட்டபர்த்திக்கா சாமி போரிங்க அந்த பஸ் 12-30 மணிக்குத்தான் வரும். நான் சீட் புடிச்சுக் குடுக்கிறேன்'' என்று ஒரு கருங்கல் ஆசனத்தில் என்னை காத்திருக்க வைத்தான். சீட் புடிக்கிறது, எனக்கும் கொஞ்சம் கைவந்திருந்தது. அது புட்ட பர்த்தியில் தவிர்க்கப்பட வேண்டியதாயினும் எல்லோராலும் தாராளமாக பயன் படுத்தப்பட்டது. அதாவது ஒரு இடத்தில் என் சால்வை, கைக்குட்டை, மஃப்ளர், பெட்டி எதையாவது வைத்துவிட்டால் ஒருவரும் அவ்விடத்தில் உட்காரமாட்டார்கள். எது எனக்கே சொந்தம். மணியடித்தாற்போல 12-30 க்கு எஸ். ஆர். எஸ் பஸ் வந்தது. உள்ளேயிருந்தவர்கள் இறங்கமுன்னரே வெளியேயிருந்து யன்னலூடாக என் மஃப்பளரை ஒரு ஆசனத்தில் போட்டேன். அப்பொழுதுதான் விழுந்தடித்துக்கொண்டு ஒரு யாழ்ப்பாண நண்பரும் வந்து ஏறினார். ''காலையிலேதான் வந்தனான். உடனே வைட் பீல்ட்டுக்கு போய் பாத்தன். நேரை இஞ்சை வாறன் ... எனக்கு ஊருப்பட்ட வேலை. இதுகளுக்கெல்லாம் நேரமில்லை. கனக்கக் கதைக்கிறீங்கள். என்ன சங்கதியென்று அறியவேணுமா'' என்று அடுக்கினார். சொல்லிவைத்தாற் போல 1-30 க்கு பஸ் புறப்பட்டது. வடக்கு நோக்கிச் செல்லும் அந்த பஸ் சுமார் 20 மைல்களுக்கு ஒரு முறை ஏதாவது கிராமத்தையோ பட்டினத்தையோ தாண்டிச்செல்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. அவையும் வறுமையானவை; முஸ்லிம்களாயிருக்கலாம். எங்கள் பஸ்ஸில் இன்னும் 5, 6 பேர் மட்டுமே புட்டபர்த்தி பிரயாணிகள், வழியில் எங்கேயும் புட்டபர்த்தி என்று எழுதப்பட்டிருக்கவுமில்லை; என் நண்பர் விடாமல் அரட்டையடித்துக்கொண்டேயிருந்தார். ''எனக்கு சாப்பாடில்லாட்டி சரிவராது. அங்கை எப்படியோ தெரியாது'' என்று கொய்யாப்பழம், மிளகு, உப்பு தடவிய கெக்கரிப் பிஞ்சு, அவித்த கச்சான் கடலை, சப்பாத்தி ஆகியவற்றை பதம் பார்த்துக்கொண்டேயிருந்தார்.

## ஏமாற்றம்

புட்டபர்த்தி என்ற பெயரே பிரயாண முடிவில் ஒரு பெயர்ப் பலகையில் மட்டும் காணப்பட்டது. இந்த பஸ்ஸோ நேரே புட்டபர்த்திக்குப் போகவில்லை. அவ்விடத்தைத் தாண்டி 2, 3 மைல்களுக்கப்பால் புக்கபட்டினம் என்ற இடத்துக்குப் போகிறது. யாத்திரீகர்களைத் தவிர பிரயாணிகள் யாவரும் அங்கே இறங்கிவிடுகிறார்கள். அந்த ஊர்வாசி ஒருவர் கொஞ்சநாள் பகவானின் ஆச்சிரமத்தில் வேலை செய்தவர். பகவானைப் பற்றிக் கொஞ்சம் சொன்னார் அக் கிராமமே பிரசித்திபெற்றது பற்றியும், ஏழைகளுக்கு உதவுவது பற்றியும், அரசாங்க உதவியின்றி கல்லூரிகள் நிறுவுவது பற்றியும் - என்னவோ ஏதோ என்ற ஆச்சரியத்துடனும் மலைப்புடனும் இலங்கையிலிருந்து புறப்பட்ட எனக்கு திருச்சியிலிருந்து பங்களூர்வரை 'ஓகோ' என்றில்லையே என்ற ஏமாற்றம் இவர் கூறியவற்றிலிருந்து களையப்பட்டது. பஸ் டிரைவருக்கும் கண்டக்டருக்கும் அவ்விடம் சொந்த ஊராக இருக்குமோ தெரியவில்லை. ஆறச்சோர பஸ்ஸைப்போட்டுவிட்டு எங்கேயோ போனார்கள். அப்போது மிருதுவான குரலில் இனிமையான சாபி பஜனைக் கீதம் ஒன்று காதில் விழுந்தது. ஒரு குருட்டுப் பிச்சைக்காரன். இரவு 8 மணிக்கு மேலிருக்கும்; குளு குளு வென்று இருந்த நிலைமையும் சூழலுக்கு ஒரு புனிதத் தன்மையை ஊட்டியது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரசாந்தி வாசலில்

பஸ் வந்த வழியே மீண்டும் புறப்பட்டது. வழியில் சினிமா தியேட்டரைக் தாண்டும்போது இங்கேயும் நாகரிகம் பரவியிருக்க வேண்டும் என்று நினைத்தேன். கடைசியாக பஸ் சென்ற பாதையின் இருமருங்கிலும் நெருக்கமாயிருந்த வீடுகள் பஸ்ஸின் இரு பக்கத்திலும் இடித்துவிடுமோ என்று சந்தேகிக்கிற அளவுக்கு ஒடுக்கமாக இருந்தது. இரவு 8-45. உலகத்தின் எல்லாப் பாகங்களிலுமிருந்து கோடானு கோடி மக்கள் வருடா வருடம் தேடிவரும் பிரசாந்தி நிலையத்தின் வாசலில் பஸ் நின்றது: சிறிய கடைக்ளேயாஞலும் முன்ஞல் ஒரு கடைத்தெரு. இரவுத் திருவிழா முடிந்து வெகு நேரத்தின்பின் நல்லூர், மாவிட்டபுரம் ஆகிய இடங்கள் எப்படிக் காட்சியளிக்குமோ அப்படியிருந்தது. ஆங்காங்கே சிறு சிறு கூட்டங்களாக மக்கள் ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள், சிலர் கடைகளில் பொருட்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

உயர்ந்த வெளிப்புற மதில், பிரதான வாயில் வழியாக உள்ளே நுழைகிறோம். உள்ளே நிசப்தம், அமைதி, குசுகுசு வென்று ரகசியம் பேசுவதுபோல சிலர் பேசிக் கொண்டிருந்தனர். உள்ளே இன்னெரு கடவை. இடையே பகவானின் போதனைகள் சில பலகைகளில் எழு நாட்டப் பட்டிருக்கின்றன. இந்த இரண்டாவது கடவையைத் தாண்டும்போது யாரோ 'உஷ்' என்று காலைச் சுட்டிக்காட்டிஞர்கள், ஏதோ பாம்போ, பூச்சியோ என்று துள்ளிக் குதித்தேன். அப்புறம்தான் அதைத்தாண்டி காலணியுடன் செல்லக்கூடாது என்ற அறிவிப்பைப் பார்த்தேன். செருப்பைக் கழற்றி பிடித்தபடி முன்னேறிஞேம். திரைப்படத்தில் பார்த்த உப்பரிகையின் முன்ஞல் நிற்கிறேன். படத்தில் தோன்றிய எடுப்பு நேரில் இல்லை. இரவு வேளை மின் வெளிச்சத்தில் பார்த்ததஞலாயுமிருக்கலாம். திருத்த வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்ததஞலாயுமிருக்கலாம். அதன் வலது பக்கமாகச் செல்கையில் கணபதி விக்

கிரகமும் தென்பட்டது. படத்தில் காணப்பட்ட கோலா கலம் நேரேயிருக்கவில்லை. படுக்கை வசதியென்ன என்ற தியானம் எங்களுக்கு. அப்போது எங்களுடன் பஸ்ஸில் வந்த குடும்பத்தினருள் ஒருவர் செல்வச் செழிப்புள்ள வட நாட்டவர்போல இருந்தது. அவர் அதிகாரத்தில் ஊறியவர் என்பதும் தெரிந்தது. பணத்தையோ அந்தஸ்தையோ காட்டி எல்லாவற்றையும் சாதிக்கலாம் என்று நினைப்பவர் போல இருந்தது. அங்கே எதற்கோ பொறுப்பாயிருக்கக் கூடியவர் என்று கருதிய ஒருவரிடம் இவர் பேச்சுக் கொடுத்தார். "இன்னொருவருடன் பேசிக்கொண்டிருக்கிறது தெரிய வில்லையா?" என்று அவர் வள்ளென்று விழுந்தார். இவர் பெட்டிப் பாம்பாகி விட்டார், எனக்கு சப்த நாடியும் அடங்கிவிட்டது. இங்கேயுமா இப்படி என்ற ஏமாற்றம் விசுவரூபம் எடுத்தது. நானும் நண்பருமாக கணபதி விக்கிரகத்தைத் தாண்டி பொது மண்டபத்துக்குச் சென்றோம். அங்கே மிக நெருக்கமாக படுக்கைகள் விரிக்கப்பட்டிருந்தன. சிலர் குக்கர் முதலியனவும் வைத்திருந்தார்கள். எங்கேயாவது ஒரு ஜமக்காளத்தை விரிக்க இடமுண்டா என்று சுற்றுமுற்றும் பார்த்தோம். 'வெதக்நா' என்றேன். இரவிலும் அதிகாலையிலும் கூட சிகரட் பிடிக்கும் பழக்கம் எனக்கு உண்டு. எடுத்த எடுப்பிலேயே இங்கேஅது சரிப்பட்டு வராது என்று தெரிந்துகொண்டேன். எப்படி 'நான்' செய்யும் வேலை? வீதிக்கு வந்தோம்.

"நீங்க சிலோனு? அங்கேயெல்லாம் பாபா சமித்திகள் உண்டா? ஒழுங்காகப் பஜனைகள் நடக்குமா? உங்களைப் பிரதிநிதிகளாய் தெரிந்தெடுத்து அனுப்பினார்களா?"
—கேள்விக்கணைகள்.

## இரவு ஜாகை

நான் எதைச் சொல்வது! விடுப்புப் பார்க்க வந்த நண்பர் எதைச் சொல்வது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்குவதற்கு இடம் பற்றிய பேச்சு வந்ததும் அவர் ''எங்களுடன் தங்கலாமல்லவா?'' என்று தனக்கு அறிமுக மான ஒருவரைக் கேட்டார். என் நண்பரோ இலவசமாக இடம் கிடைக்கப்போகிறதென்று குதூகலித்தார். ஆனுல் 'நானே' பேர்வழியை உடனேயே எடைபோட்டுவிட்டேன். ''பட்டணத்தானுக்குப் பட்டிக்காடு காட்டுகிருன்'' என்று என் நண்பரின் காதுக்குள் சொன்னேன். அவருடைய பேச் சின் 'சாம்பிளை'த்தருகிறேன். நீங்களே அவரைப் பற்றித் கணித்துக்கொள்ளலாம்.

''நான் வந்து நாலைந்து நாட்களாகிறது. பாபாவை இரண்டு முறை நேரில் பார்த்துப் பேசிவிட்டேன். நீங்கள் சிலோனிலிருந்து புறப்படும்போதே நீங்கள் வருவது பாபா வுக்குத் தெரியும்... ''

அயலில் நெருக்கமான காற்ருேட்டம் குறைந்த வீடு கள்: சிறிய அறைகள் வாடகைக்கு, 2 ரூபாவிலிருந்து 5 ரூபா வரை வாடகை. சொந்தக்காரர்கள் வறியவர்கள் தான். தெலுங்குமொழி பேசுகிருர்கள், இரண்டொரு அவசியம் தேவையான ஆங்கிலச் சொற்களும். வன், ரூ, திறீயும் தெரியும், குளிப்பதற்கு காலையில் வெந்நீர் ஒரு பக்கட் (வாளி) இருபத்தைந்து பைசா.

வேலூரிலும் ஒட்டல் செலவு அதிகமில்லை. ஆஸ்பத் திரியிலேயே அனெக்ஸுகள் 7 ரூபாவுக்கு குறைவான வாடகைதான்.

ஒரு அறையை அமர்த்தி பெட்டியை வைத்துவிட்டு மீண்டும் கடைத்தெருவுக்கு வந்தோம்: ஒரு சாப் பாட்டுக் கடைக்குள் நுழைந்து என் நண்பர் இட்டிலியில் ஒரு பிடி பிடித்தார். கடைகளைச் சுற்றிப் பார்த்தோம். எங்கேயும் விபூதி, படங்கள், மோதிரங்கள், பதக்கங்கள் ஊதுபத்தி—இப்படியான பொருட்களே குப்பையாக இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை 4 மணிக்கு ஓங்காரம், 5 மணிக்கு சுப்ரபாதம், 6 மணிக்கு தரிசனம், 7 இலிருந்து 11 க்கிடையில் பேட்டிகள். 11 மணிக்கு பஜனை - இவற்றைப் பற்றிக் கேட்டறிந்தோம். அறைக்குத் திரும்பி படுக்கையில் சாயும்போது என் நண்பர் "எனக்குப் பேட்டி கிடைக்காட்டிப் பரவாயில்லை. மதுரையிலை நான் ஸ்கூட்டருக்கு உதிரிப்பார்கங்கள் வாங்கவேணும். இதைவிட ஷேர்ட், லோங்ஸ் தைப்பிக்கவேணும். இதென்ன நீங்கள் அங்கையிருந்து பாத்திரக்காரனுக்குப் போடுறதுக்கே பழந்துணி மாராப்புக்கொண்டு வந்தனிங்கள். மற்றது ரயில் சேவையெல்லாம் தலைகீழாயிருக்கு. ராமேஸ்வரத்துக்கு முந்தியே போய்விடவேணும். எனக்குச் சும்மா பாத்தாச் சரி"—உறங்கிவிட்டார் அவர்.

அதிகாலை 4 மணிக்கு எழுந்துவிட்டேன். கடைத் தெருவுக்குப்போய் நெஸ்கபேயும் புறாவும் மாறி மாறி அடித்தேன். நெஸ்கபே 30 பைசா புறா 20 பைசா. வந்து நண்பரை எழுப்பிவிட்டு வெந்நீரில் ஸ்நானம் செய்தேன். 5-30 அளவில் "நீங்கள் முன்னுக்குப் போங்கோ, நான் பின்னாலை வாறன்" என்றார் என் நண்பர் ஷேவ்' எடுத்துக்கொண்டே. வெள்ளைக் காற்சட்டையும் வெள்ளை ஷர்ட்டும் அணிந்து கொண்டு பிரசாந்தி நிலையத்துள் நுழைந்தேன்.

## தரிசனம்

செருப்பு பாலியாற்று மணலில் சரசரக்கிறது. அம் மண் இயற்கையானதா அல்லது எங்கிருந்தாவது கொண்டு வந்து பரவப்பட்டதா என்று தெரியவில்லை. நீர் அள்ளிக் கொண்டு போகாதிருக்க கருங்கல் அணைகள் இடையிடையே அடுக்கப்பட்டிருக்கின்றன. பாத அணியுடன் அப்பால் செல்லக்கூடாது என்ற அறிவிப்புப் பலகைக்கு அண்மையில் செருப்பைக் கழற்றிவிட்டேன். பிரசாந்தி நிலையம் கீழே பூஜை மண்டபத்தைக் கொண்டது. அதன் முன்னால் சலவைக்கல் பதிக்கப்பட்ட விறாந்தை. விறாந்தையில் இரு மூலைளிலும் இரு அறைகள். மேல் மாடியின் மையத்தில் உப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிகை. அதைப் பார்த்தபடி ஆண்களும் பெண்களும் உட்கார்ந்திருக்கிறார்கள். அரை வட்டமாக - இடது கோடியிலிருந்து மத்தியிலுள்ள வாயில் வரை ஆண்கள், அதாவது உப்பரிகையின் வலது பக்கமாக. மறுபுறம் முழுவதும் பெண்கள். டைட்ஸ்கேர்ட், மினிஸ்கேர்ட், பெல்பொட்டம் இவையொன்றும் கிடையாது. கழுத்துக்கூடத் தெரியாமல் போர்த்திருக்கும் சேலைதான் எல்லாச் சாதியினரும்அணிந்திருந்தார்கள்.

பொது மண்டப ஷவர்களில் எல்லாம் நீர் பாயும் சரசரப்பொலி: பிந்தியவர்கள் அவசரமாக குளித்துக்கொண்டிருந்தார்கள்போலும். வானம் மப்பாயிருந்தது. சூரியஒளியைக் காணவில்லை. எல்லாமே அரை மங்கலாய்த்தெரிகிறது. குளிர் காற்று மெதுவாக உடலை வருடிக்கொடுக்கிறது; உடல் எல்லாம் புல்லரிக்கிறது. அரைவட்டத்தில் சீட் பிடித்திருந்தார்கள் முன்னரே சொன்னேன். லேஞ்சி, துவாய், தடுக்கு போன்றுவற்றை வைத்து கல்லொன்றைப் பாரம் வைத்துவிட்டு எங்கேயோ போய்விட்டார்கள். பேச்சு மூச்சில்லை. அமைதி எங்கு பார்த்தாலும், சாதாரண நாளாயிருந்தும் 500 க்கு மேற்பட்டவர்கள் அங்கே காணப்பட்டனர்.

மிக விரைவாக சீட் பிடித்தவர்கள் வந்து இடங்களை நிரப்புகிறார்கள். என் நண்பர் புதிய சேலம் பட்டு வேட்டி சரசரக்க இளைக்க இளைக்க வந்து 'இது எனக்கே?' என்றபடி என் பக்கத்திலிருந்த லேஞ்சியைத் தூக்கி என்னிடம் தந்துவிட்டு அமர்கிறார்: ஆம்! அது அவருக்கு நான் பிடித்து வைத்த சீட். அவர் உரத்துக்கேட்ட அவ்விரு வார்த்தைகளைக் கூட பக்கத்திலிருந்தவர்கள் பிடிக்காதவர்கள் போல முகத்தைச் சுழித்தார்கள். நான் அவரைத் திரும்பிப் பார்த்துவிட்டு மௌனமாக தலையை உப்பரிகையின் பக்கம் திருப்புகிறேன்.

நேரம் 5-59. இருந்தாற்போல் எல்லோரும் மூச்சுவிடும் சத்தம். நிம்மதிப் பெருமூச்சா? ஆம், அந்த மங்கள ஒளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் உப்பரிகையில் பகவான் நிற்கிறார்: இடுப்புவரைதான் கீழே உட்கார்ந்திருக்கும் எங்களால் காணக்கூடியதாயிருக்கிறது. எல்லோரும் கை கூப்புகிறார்கள்; நானும் என் நண்பரும் கூட.

படங்களில் காணப்படுவது போன்ற அதே தலை: ஆனால் அப்படிப்பட்ட சருமையுமில்லை, பயங்கரமாயுமில்லை, மெல்லிய சுருள்கள், சற்று அதிகமென்பதைத்தவிர பார்க்கப் பிடிக்காத மாதிரியுமில்லை. சிவப்புநிற அங்கிதான். அது கூட செல்வச் செழிப்பைக் காட்டும் வெல்வெட் சிவப்பு அல்ல. காவியை அடுத்த மங்கலான செந்நிறம்தான். வலதுகையின் அங்கை வானத்தைப் பார்த்தபடி. விரல்கள் மடிந்திருக்கின்றன. முழங்கைவரை பூமிக்கு சமாந்தரமாய் பிடிந்திருந்தார். இடது கை உடலோடு ஒட்டியபடி தொங்குகிறது. அது சும்மா தொங்கவில்லை? முழங்காலுக்குமேல் அங்கியைப் பிடித்தபடியிருந்திருக்க வேண்டுமென்பது பின்னால் நெருக்கமாகக் கண்டபோது தெரிந்தது. வலது பக்கம் தலையைத் திருப்புகிறார், ஆண்களின் அரை வட்டம் தொடங்கும் இடத்தை நோக்குகிறார். உட்கார்ந்திருந்தவர்களை ஊடுருவிப் பார்க்கிறார், நிதானமாக. எக்ஸ்ரே கண்களோ?

மெதுவாக தலை இடது புறமாக திரும்பிக்கொண்டே வருகிறது. வலது கைவிரல்கள் கட்டைவிரலில் ஆரம்பித்து ஒவ்வொன்றாக விரிகிறது. அதன் அர்த்தமென்ன? 'அட இத்தனை பாவிகளா?' என்று ஏங்குகிறாரா? 'உங்களுக்கு என்னால் ஆவதென்ன?' என்று கையை விரிக்கிறாரா? 'பரவாயில்லை. உங்களுக்கு கை கொடுத்து உயர்த்தி விடுகிறேன்' என்கிறாரோ? ஒன்றும் தெரியவில்லை. கண்கள் எனக்கு நேரேயும் குத்திட்டு நின்றதுபோல ஒரு விநாடித் தோற்றம்: அவர் பார்வை ஆண்கள் பக்கம் முடிந்து பெண்கள் பக்கம் திரும்பும்போது இடது கை மேலே உயர்கிறது: அதேபிடி. படிப்படியாக இடது கோடிவரை கண்கள் திரும்பும்போது விரல்கள் மலர்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் 6.02. பகவான் உள்ளே செல்கிறார், உருவம் மறைகிறது. மெய்சிலிர்த்தபடியிருக்கிறது. மெய் மறந்த நிலை. எல்லாம் கனவோ, நனவோ என்று தெரியாத மயக்கம். அசைவற்று சிலையாயமர்ந்திருக்கிறேன். அதிகமானோர் எழுந்து 'சீட்டைப் பிடித்துவிட்டு' வெளியே போகிறார்கள். என் நண்பர் ''வாருங்கோ, போய் சாப்பிட்டிட்டு வருவம். நீங்கள் சாப்பிடறது அதிகமில்லை போலையிருக்கு, எனக்கு சாப்பாடில்லாட்டி இருக்கேலாது'' என்றபோது சுய உணர்வு பெற்றேன். எங்கேயோ சஞ்சாரம் செய்தவன் மீண்டும் பூமிக்கு வந்து விட்ட உணர்வு. சீட்டைப் பிடித்துவிட்டு வெளியே வந்து இட்லியைப் பதம் பார்த்தோம். மசாலா தோசையிலும் கை வைத்தோம்.

இரவு எங்களை இங்கு கொண்டுவந்த பஸ் காலையில் நான் வரும்போது பங்களூருக்கு புறப்பட ஆயத்தமாயிருந்தது. இப்போது அது போய்விட்டது. அதில் ஒரு பிரயாணி வட மராட்சியைச் சேர்ந்த ஆசிரியை. காலையில் காப்பி சாப்பிடும்போது கண்டு பேசினேன். அவர் எவ்வளவு அதிர்ஷ்டம் கெட்டவர்!

அவர் திருச்சியிலிருந்து நேரே புட்டபர்த்திக்கு வந்திருக்கிறார். இனி திருச்சிக்குத் திரும்பப்போய் வேலூர் ஆஸ்பத்திரிக்கு போகவேண்டுமென்றார். இங்கு இரண்டு மூன்று நாட்களுக்குமேல் நின்றிருக்கிறார். பகவானை தரிசித்திருக்கிறார். பேட்டி காணும் பாக்கியம் பெறவில்லை. சலித்துக்கொண்டார். ஆயிரத்தெட்டு வியாதிகள் இருப்பதாகச் சொன்னார். வேலூரில் பூரண பரிசோதனைக்கு அறிமுகக் கடிதங்கள் எல்லாம் கொண்டு வந்தாராம். என்னுடைய அனுபவம் வேறு. அங்கே எவ்வித அறிமுகமும் தேவையில்லை. பேயர்ட்பலகையிலோ, ஆஸ்பத்திரிக்கை நூலிலோ அங்குள்ள டாக்டர்களின் பெயர்கள், தராதரம், எத்துறையில் வல்லவர் என்பதெல்லாம் இருக்கும். உங்களுக்கு விருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பமான ஒரு பெயரை—வேண்டுமானால் அப் பிரிவுத் தலை வரை - தேர்ந்தெடுத்து ரூபா 35/- கட்டினால் சரி. அவர் லீவாயிருக்கும் நேரத்தை அவருடைய காரியதரிசி கூறு வார். எல்லா சர்ஜன்களுக்கும் ஒவ்வொரு காரியதரிசி உண்டு. அவர் கூறும் நேரத்துக்கு அவருடைய அறைக்குப் போனால் அவர் உங்களுக்காகக் காத்திருப்பார். அது ஒரு பிரச்னையேயல்ல.

## அதிர்ஷ்டம் கெட்ட ஆசிரியை

அது நிற்க; இந்த அம்மையாரை இலங்கையிலிருந்து தன் மனைவியுடன் வந்திருந்த பலாலி ஆசிரிய பயிற்சிக் கல் லூரி மகேசு என்பவர் 'அவசரப்பட்டுப் போகாதையுங்கோ. இண்டைக்கும் ஒருநாள் நிண்டு பாத்திட்டுப் போங்கோ' என்று காரணத்தோடு தடுத்திருக்கிறார். லீவு போதாது, திருச்சியில் பணம் வாங்கிக்கொண்டு வேலூர் போக வேண்டும் என்றார் எஸ். ஆர். எஸ். பஸ்ஸில் ஏறிப் போயேவிட்டார். பாவம்; அவருக்கு அதிர்ஷ்டமில்லையென் பது பத்து மணிக்கிடையில் வெட்ட வெளிச்சமாகியது.

7 மணிக்குமேல் பேட்டிக்கு அழைக்கக்கூடும் என்றனர். செவ்வாய்க்கிழமையன்று எல்லோரும் காத்திருந்ததுதான், அவர் வரவுமில்லை, எவரையும் அழைக்கவில்லையென்றும் சொன்னார்கள். அன்று ஏதோ ஜெயந்தியாம், அந்த ஏற் பாடுகளினால் அவர் வெளியே வரவேயில்லை என்றார்கள். இருவரும் எங்கள் சீட்டுகளை நோக்கிப் போகிறோம். அங்கே பரபரப்பு. நேரமோ 6-55; 'திடுதிப்'பென்று எங்களிடத் துக்குப் போகிறோம். உட்காரவில்லை. விருந்தையின் இடது பக்க அறைக்கதவு திறக்கப்பட்டு காலையில் பார்த்த திருவு ரும் மெதுவாக அடியெடுத்துவைத்து வெளியே வருகிறது. மெல்லிய தோற்றம், உயரமும் அதிகமில்லை. எடையும் அதிகமிருக்காது, நடையில் சற்று பெண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேட்டி அழைப்பு

வலதுகை தூக்கிப் பிடித்தபடி. இடதுகை உடலோடு ஒட்டியபடி, அதன் விரல்கள் முழங்காலுக்குமேல் அங்கியைப் பிடித்தபடி. அடிமேலடி எடுத்துவைத்து ஆண்களை நோக்கி வருகிறார். நிதானமான நடை, உன்னிப்பான பார்வை. சலவைக்கல் விருந்தையின் முழுநீளத்தையும் கடந்துவந்து மணலில் கால் வைக்கிறார். வழியில் நின்ற இரண்டொரு தொண்டர்கள் மாத்திரம் பணிந்து ஒதுங்கி வழிவிடுகிறார்கள். இடது கோடியில் முதல்வரிசையில் உள்ளவர்களை அணுகுகிறார். அப்படியே அவ் வரிசைக்கு அண்மையாக அரைவட்டப் பாதையில் நடை. முதல் வரிசையில் உள்ளவர்களையும் பார்க்கிறார்; பின்னுலுள்ளவர்களையும் பார்க்கிறார். தூரத்தில் மரங்களின்கீழ் நிற்பவர்களையும் பார்க்கிறார். எல்லோர் கரங்களும் கூப்பியபடியிருக்கின்றன. பார்த்துப்பேசும் பாக்கியம் இன்றுவது கிடைக்காதா என்ற அங்கலாய்ப்பு எல்லோர் முகத்திலும் எழுதியொட்டி இருக்கிறது. ஒரு புல்லரிப்பு. ஒரு புளகாங்கிதம். மயிர் கூச்சலெடுக்கிறது. உரோமங்கள் குத்திட்டு நிற்கின்றன. உடம்பு சிலிர்க்கிறது. உள்ளம் பதைக்கிறது.

## அற்புதம்

ஈழநாடு என் நோயைப் பற்றி முதன்முதலில் எழுதியவுடன் உரும்பராயில் பல வருடங்களுக்கு முன் என்னிடம் கல்வி கற்ற மாணவியொருத்தி வீடுதேடி வந்தாள். 'பேப்பரில் படித்தேன். பார்க்கவேண்டும் போல் இருந்தது. வந்தேன். நீங்கள் பாபாவிட்டை ஒருக்காப் போட்டு வாங்கோ. அதெல்லாம் சரிவரும். ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ' என்றாள். அவள் என்னைப் பேசவே விடவில்லை; விசரர், பைத்தியகாரர் மாதிரி வெறியோடு பேசினாள். தனக்குப் பிறந்த குழந்தையொன்று பலவீனமாயிருந்ததாம். இதயத்தில் துவாரம் என்றார்களாம்; உடனே சத்

திரசிகிச்சை செய்ய முடியாது என்றுர்களாம். நடமாடா மல் உணவும் உட்கொள்ளாமல் நலிந்துகொண்டு குழந்தை யிருக்க தான் மீண்டும் கர்ப்பமாகுளாம். திரவ உணவையே வாந்தியெடுத்து விட்டு சோர்ந்து கிடக்கும் குழந்தையை யார் கவனிப்பார்கள்? தன் தாயைத் துணைக்கு அழைத் துக்கொண்டு குழந்தையைத் தோளில் போட்டுக்கொண்டு பங்களூர் போய்விட்டாள். பாபாவைப் பார்த்திருக்கிருள். அவள் பாடக்கூடியவள். பஜனையில் உற்சாகமாக ஈடுபட் டிருக்கிருள். 'ஒன்றுக்கும் பயமில்லை. நீ சிலோனுக்குப் போ' என்று பகவான் விபூதி பிரசாதம் கொடுத்திருக்கிறர். அவள் மறுநாளும் உறுதிப் படுத்துவதற்காக அங்கேயே நின்றிருக்கிருள். அவர் வற்புறுத்தி அஞ்ச வேண்டியதில்லை யென ஆறுதல் கூறி அனுப்பியிருக்கிறர். "என்ன மாஸ்டர் மற்றுசுக்கு வரமுந்தி பிள்ளை இடியப்பம் தின்னுது! இலங்கை வந்து நான் ஆஸ்பத்திரியிலை மற்றப்பிள்ளை பெத்துப்போட் டுத் திரும்புறன். அது நடந்து திரியுது" என்றுள். "எங்கள் ஊர்க்கோயிலில் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் கிருஷ்ண விக்ரகம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்து வியாழன் தோறும் பஜனை ஒழுங்காக நடக்கிறது, மாட்டேன் என்று சொன்ன பூஜகர் அர்ச்சனை செய்கிருர். அதிலை விஷயமிருக்கு; நீங்க யோசியர்ளுதயுங்கோ" —மழை பெய்து ஓய்ந்த மாதிரி பேசி முடித்து விட்டுப் போய் விட்டாள்.

அவளுக்கு நேர்ந்ததுபோல எனக்கும் அதிசயம் ஏதா வது நிகழுமா? எப்படி நான் எதிர்பார்க்க முடியும்? எனக்கு என்ன அருகதை இருக்கிறது? பரிதாப மனிதக் கூட்டத்தை அனுதாபத்தோடு பார்வையிடும் பகவானின் அனுக்கிரகம் யாருக்கு? வலதுகை நீளுகிறது. ஒருவரைச் சுட்டிக் காட்டு கிருர். வரும்படி சமிக்ஞை செய்கிருர். அவர் எழுந்ததும் தொண்டர்களும் விருந்தையில் பகவானின் அறையின் முன்னுல் உட்காரச் செய்கிருர்கள். இடையே பகவான் குனிகிருர். கையில் சிலேட்டுடன் உட்கார்ந்திருக்கும் குழந்தையொன்றின் சிலேட்டை வாங்கி எதையோ எழுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுக் கொடுக்கிறார். 'ஓம்' என்ற எழுத்து என்று பின்னர் தெரியவந்தது. வித்தியாரம்பம் செய்து வைப்பதை ஒக்கும் செயல் என்றும் அறிந்தேன். எப்போதாவது சிலேட்டுடன் இருக்கும் குழந்தையைத்தாண்டி வந்துவிட்டால், எதையோ மறந்துவிட்டவர் போல் திரும்பப்போய் அதை வாங்கி எழுதிக் கொடுத்துவிட்டுத் தொடர்கிறார்.

## நான் பதிதனா?

இதோ என் முன்னால் கால்கள் நரிக்கின்றன. குனிந்து என்னைப் பார்க்கிறார். ஜன்ம சாபல்யம், பாப விமோசனம் எனக்கா? மனதுள் கெஞ்சுகிறேன். கண்கள் என்னைவிட்டு மேலே மிதக்கின்றன. போச்சு! என்னுடைய ஆசைகள் நிராசைகள்தானா? எல்லாம், எல்லாமே தொலைந்ததா? கட்டிய கோட்டையனைத்தும் தகர்ந்ததா? நம்பிக்கைத் தீபம் அணைந்ததா? பாதங்கள் நகர்கின்றன. உள்ளம் தொய்கிறது.

என்னைத்தாண்டி இரண்டடி செல்லவில்லை. கூட்டத்தில் யாரையோ பார்த்தார். பழைய நண்பர் ஒருவரைக் கண்டதுபோல ஒலியெழும் நகைப்பு. வலது கையை உயர்த்தினார். தொங்கிய அங்கியின் கையை முழங்கைவரை இழுத்துவிட்டார். காற்றில் கழற்றினார். விரித்திருந்த உள்ளங்கையிலிருந்து பால் போன்ற வெண்ணிறப் பொருள் சீறிப் பாய்ந்தது. அது தரையில் விழுமுன்னரே, அந்தரத்திலேயே விரல்களினால் பற்றி கூட்டத்திலிருந்தவரிடம் கொடுத்துவிட்டு மேலே நகர்கிறார். நான் அசந்துபோனேன். படத்தில் விபூதி கொடுத்ததைப் பார்த்திருக்கிறேன். பலர் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். நேரில் பார்க்கும்போது...

முன் வரிசையிலிருந்தவர்களில் சிலர் அவர் பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொள்கிறார்கள். சிலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடமுயற்சிக்கும்போது 'சே, சே' என்று இரண்டடி பின்னால் எடுத்துவைக்கிறார். இதை எப்படிப் புரிந்து கொள்வது?

ஆண்களும் பெண்களுமாகப் பலர் பேட்டிக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். பகவான் அறைக்குத் திரும்பிவிட்டார். ஒவ்வொருவராக உள்ளே அழைப்பார் போலிருக்கிறது. ஏமாந்த சிலர் எழுந்து செல்கிறார்கள். ஆண்கள் வரிசை தொடங்குமிடத்தில் நின்று பலாலி மகேசு அவர்கள் கையைக் காட்டுகிறார். என் நண்பர் எழுந்து அவரை நோக்கி ஓடுகிறார்; இருவருமாக எனக்குக் கை காட்டுகிறார்கள். நானும் அவர்களிடம் செல்கிறேன்; விருந்தையில் ஒரு தொண்டன் — பன்னிரண்டு வயதிருக்கும் 'சிலோன்?' என்று கேட்கிறார்; மகேசு 'ரு' என்கிறார், எங்களிரண்டு பேரையும் காட்டி;

மூவருமாக பேட்டிக்கு காத்திருப்பவர்களிடம் போய் பகவானின் அறை வாயிலில் உட்காரமுன் " மகேசு "இன்றைக்கு ஒரு சிலனீஸ் வெடிங். அதற்கு சிலனீஸ் எல்லாரையும் பார்க்க பகவான் அனுமதித்திருக்கிறார்" என்று காதில் கிசுகிசுத்தார். பள்ளிக்கூட மாணவனைப் போல பயபக்தியுடன் மூடப்பட்டிருந்த கதவைப் பார்த்தபடி உட்கார்ந்திருக்கிறேன். நான் அவ்வளவு பதிதனல்ல.

வடமராட்சி ஆசிரியை நிச்சயமாக அதிர்ஷ்டமற்றவர் தான். அவசரப்பட்டு காலையில் புறப்பட்டுப்போனாரே!

அறைக்கதவு திறக்கப்படுகிறது. உள்ளேயிருந்து ஓரிருவர் வெளியேறுகிறார்கள். தொங்கும் திரைச்சீலையைப் பகவான் தூக்கிப் பிடித்தபடி எங்களைப் பார்த்து 'கம் ஒன்' என்றார். ஆண்கள் விழுந்தடித்து உள்ளே நுழைந்து விட்டோம். பெண்கள் மெதுவாக ஒவ்வொருவராக நுழைகிறார்கள். 'கம் ஒன் ... ஜல்தி' என்கிறார். உள்ளே திரும்பி எங்களைப்பார்த்து, "இவங்களெல்லாம் லேடிஸ் இல்லை. லேசிஸ்! (சோம்பேறிகள்)' என்று சொல்லிக்கொண்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைக்கிறார். வாய் திறக்கவும் அஞ்சி நிற்கும் எங்களுடன் சரளமாகப் பேசி மனதைத் திறக்கும் செயலே இது என்று இந்த நகைச்சுவையைக் கருதினேன்; கதவு சாத்தப் படுகிறது.

## திருமணம்

அந்த அறை அப்படியொன்றும் பிரமாண்டமானதல்ல. 12 அடி சதுரமிருக்கலாம். நாங்கள் நுழைந்த கதவின் மூலையில் இடது புறத்தில் திரைச்சீலை தொங்கவிடப்பட்ட இன்னொரு கதவு. அது பகவான் மாடிக்கேறும் படிகளைக் கொண்ட ஒரு பகுதிக்குரியது. நாங்கள் நுழைந்த கதவின் வலது மூலையில் ஒரேயொரு நாற்காலி. கை வைத்தது, பழைய மொடல், அது அவர் உட்காருவதற்கு.

நாங்கள் நின்றுகொண்டிருக்கிறோம்; அவருடைய முகத்துக்கு நேரே புல்சூட் அணிந்த வயது முதிர்ந்த ஒரு கல்கத்தா வாசி. ஒரு ஐ. சி. எஸ். அவரைப் பார்த்து 'திஸ் இஸ் எ சிலனீஸ் வெடிங்; வட் இஸ் எ வெடிங்?' என்றார். (இது ஒரு இலங்கைத் திருமணம். திருமணம் என்றால் என்ன?) அவர், பாட ஆரம்பிக்கும் போது பாடுவதர் தொண்டையைக் கனைத்து சரிப்படுத்துவது போல. ஏதோ சொல்ல முயற்சிப்பதற்குள் 'வெடிங் இஸ் யூனிட்டி' என்றார்; (திருமணம் என்பது ஐக்கியம்; ஒன்றுபடுதல்). அப் போதுதான் மணமகனைப் பார்க்கிறேன். சிவந்த நிறம் பொடியன் சைஸ். வேட்டிகட்டச் சரியாகத் தெரிந்தவர் போலில்லை. சற்று நீண்ட மூக்கு. சிலோன் என்கிறாரே, தெலுங்கன் மாதிரிக் காணப்படுகிறாரே என்று எனக்குள் ஒரு சந்தேகம். மணப்பெண்ணைப் பார்க்கிறேன்; அமைதியும், நிதானமும் தன்னம்பிக்கையும் உடையவராகக் காணப் படுகிறார். இலங்கையர்தான்.

அவர்களுக்குப் பின்னால் நின்ற அவர்களுடைய இரு தாயார்களையும் பகவான் பார்க்கிறார். வலது கை காற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ழசுல்கிறது. திருநீற்றுப் பெருக்கு. வீபூதியை அவர்கள் கையில் கொடுக்கிறார்; மீண்டும் ஒருமுறை. அப்புறம் 'உட்காருங்கள்' என்கிறார்; இரு கைகளினாலும் அமரும் படி சைகை செய்கிறார். கதவிலிருந்த மூலையிலிருந்து எதிர் மூலைவரை அரை வட்டமாக உட்காருகிறோம். எதிரே கதிரையில் போய் பகவான் உட்காருகிறார். தர்மோப தேசம் தொடங்குகிறது.

கடல்தான் ஆங்கிலமும் தமிழும். தங்குதடையின்றி வேகமாக வருகின்றன; இடையிடையே ஹிந்தியும் தெலுங் கும் கலக்கிறது போலிருக்கிறது. உச்சரிப்புச் சாதாரண இந்தியர்களது போலில்லை. தெளிவாயிருக்கிறது; தமிழில் மிகக் குறைவாக மட்ராஸ் சாயல் விழுகிறது. அடிக்கடி 'நய்' என்று கேட்கிறார். 'இல்லையா?' என்று நாம் கேட் பதை ஒத்திருக்கிறது. வேதம், புராணம், கீதை, மதத் தலைவர்கள், குறள், காந்தி எல்லோரிடமிருந்தும் மேற் கோள்கள் தாராளமாகக் கையாளப்படுகின்றன. நகைச் சுவைக்கும் பஞ்சமில்லை பேசுகிற வேகமோ அலாதியானது, ஆழமான கருத்துகள்; விளக்கமான மொழி — பணமக் களுக்கு ஆலோசனைகள் என்றும் சொல்லலாம், எங்களுக் கெல்லாம் வாழவழி, சன்மார்க்க உபதேசம் என்றும் சொல் லலாம் - பேச்சு அத்தோரணையில் அமைந்திருந்தது.

பேச்சுவாக்கில் 'பொலிற்றிக்கல் ஹீரோர்ஸ் ஆர் பிராக் டிக்கல் ஸீரோஸ்' (அரசியல் வீரர்கள் செயலில் சூனியங் கள்)' என்றார். வெறும் வாய்ப்பேச்சு வீரர் என்பதுதான் பொருள். 'எல்லாம் செய்வேன் என்று பேசுவாங்க. அவங் களாலே ஒண்ணுமே முடியாது; அரசியல், பொருளாதா ரம், ஒழுக்கம்—இப்படி அவர் தொடாத விஷயமேயில்லை. சொற்களில் தாளம் போடும் ஜாலமும் நம்மை மயக்கு கிறது. குரல் கணகணவென்று சற்று உலோகக்குரல்தான்; ஆனால் கவர்ச்சியாயிருக்கிறது, நன்றாக வெற்றிலை போடு வாரென்று சொன்னார்களே, பற்களைப் பார்க்கிறேன்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவி படிந்திருக்கிறதா என்று, காதுேம், வரிசையான அழகான பற்கள். பாதங்களைப் பார்க்கிறேன்; அங்கி மூடிக் கொண்டிருக்கிறது, அறையைச் சுற்றிப் பார்க்கிறேன், விசேஷம் எதுவுமில்லை, ஒரு யன்னலில் பூக்குடலையோ என்று சந்தேகிக்கக்கூடிய ஒரு பிளாஸ்டிக் பை வைக்கப்பட்டிருக்கிறது. அவருடைய பேச்சை கிரகிக்க முடிந்தது; ஆனால் அப்படியே திருப்பிச் சொல்வது அசாத்தியம். எத்தனையோ நீண்ட பேச்சுகளையெல்லாம் திருப்பி மொழி மாற்றி ஒப்புவிக்கக்கூடிய என்னாலேயே அது முடியவில்லை. 'நான்' தேய்கிறது. சுமார் 35 நிமிஷங்கள் விடாமல் பேசினார்.

அப்புறம் ஆசனத்தை விட்டு எழுந்தார். ஏன் எழுந்தார்? மணமக்களை நோக்கி நடந்தார். அவர்களுடைய வலது பக்கத்தில் நின்றார். வலது கோடியிலிருந்த எனக்கு முதுகுப்புறம்தான். வலதுகையை நீட்டினார். என் முகத்துக்கு நேரே அது நின்றது. அங்கியின் கையை முழங்கை வரை இழுத்துவிட்டார். சுழற்றினார்; 'ணிங்' என ஒரு ஒலி கேட்டது. ஒலிக்கக்கூடிய பொருள் எதுவும் இந்த அறையில் இருக்கவில்லையே என அதிசயித்தேன். மாயமில்லை, மந்திரமில்லை, தந்திரமில்லை, கண்கட்டுவித்தையில்லை—அவருடைய வலது கையிலிருந்து இரண்டு கைகளின் முதலிரு விரல்களாலும் பிரித்தெடுக்கிறார்—கசங்கியிருந்த ஒரு மஞ்சள் கயிறு. மத்தியில் லட்சுமி படம் போட்ட ஒரு தாலி. இது வேறு உலகம்தான்!

மணமகனிடம் அதைக் கொடுத்தார். "இன்றைக்கு வியாழக்கிழமை, நல்ல நாள், கட்டு" என்றார். அவனுக்கிருந்த ஆனந்தத்தைச் சொல்லிமுடியாது. எழுந்துநின்று குனிந்து கட்டுகிறான். அவனுடைய முதுகை இடது கையால் தடவியபடி ஒரு சமஸ்கிருத சுலோகத்தை ஓதுகிறார். கட்டி முடிந்ததும், 'மரீட்லைஃப்" என்றால் என்ன தெரியுமா? ("தாம்பத்ய வாழ்க்கை என்றால் என்ன?") என்று

5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேட்கிருர். அவன் விழிக்கிருன். ''மறீட்லைஃப் என்ருல் அட்ஜஸ்மன்ட்'' (தாம்பத்ய வாழ்க்கை என்ருல் விட்டுக் கொடுத்தல்) என்ருர்.

''உனக்குக் கோபம் வருகுதென்று வச்சுக்கோ. என்ன பண்ணுவே? ஒரு டம்ளர் தீர்த்தம் சாப்பிடு. ஓரிடத்திலேயே 5 நிமிஷம் சும்மா உட்கார்ந்திரு, 'அங்கர்' தானுகவே போயிடும்'' என்ருர்.

பெண்ணைப் பார்த்து ''நீ காரோட்டறது பாத்திருக்கேயில்லை? அதுலே 'அக்சிலரேட்டர்' (வேகமாற்றி) பாத்திருக்கேயில்லே. அதுதான் நீ, பொண்ணு. (இடதுகையால் ஸ்டீயரிங் பிடிப்பது போல காட்டிக்கொண்டே) ஸ்டீயரிங் தெரியுமில்லே, அதுதான் 'ஹஸ்பன்ட்.' ஸ்டீயரிங்கை கவனிக்காமே அக்ஸிலறேட்டரை அழுத்திஞ என்ன ஆகும் தெரியுமா?'' என்று கேட்டார். அந்த ஐ. சி. எஸ். ''டிசாஸ்டர்'' என்ருர். ''ஒண்ணையொண்ணு அனுசரிச்சுத்தான் நடக்கணும்'' - இது பகவான். இப்படி அன்ருட வாழ்க்கையிலிருந்து அவர் காட்டும் உவமான உவமேயங்கள் ஆழப் பதிவன; அர்த்த புஷ்டியுடையன.

''இந்தாங்க, நீங்க ரெண்டு பேருமே உங்க 'மதரை' 'ஹப்பியா' வச்சுக்குங்க; 'மதர்' என்ருல் 'கிவர்' (தாயென்ருல் கொடுப்பவள்). அவங்க இல்லாம நீங்க இங்கை எப்படி வந்தீங்க? நீங்க உங்க மதரை ஹப்பியா வச்சுக்கேலென்ஞ. உங்க பிள்ளைங்க உங்களுக்கு என்ன செய்யும்?'' — இப்படி அவர்கள் குடும்ப வாழ்க்கை சிறக்க அறிவுரை, ஆலோசனை வழங்குகிருர். பெயர்களை விசாரித்தார்; மாப்பிள்ளை சுரேந்திரன் — டெக்னிகல் அசிஸ்டென்ட். பெண்பிள்ளை அனந்தலட்சுமி. லட்சுமி என்பதற்கும் விரிவான ஒரு விளக்கம் கொடுத்தார் பகவான், நல்லவர்கள் அவர்கள்; அவர்கள் பொருட்டுப் பெய்த அருள் மழையில், அன்பு மழையில் தெப்பமாக நனைந்து கொண்டு நிற்கிறேன் நான்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யன்னலிலிருந்த பிளாஸ்டிக் பையை எடுத்தார். அதற்குள் எழுதிய கொப்பி ஒற்றைகளில் அழகாக மடிக்கப்பட்ட விபூதிச்சரைகள். பிடிபிடியாக எடுத்து எங்கள் மடிகளில் போட்டார். 'எல்லாப் பசங்களுக்கும் கொண்டுபோய்க் கொடுங்க' என்றார். என் மடியில் 13 சரைகள் விழுந்தன.

பக்கத்திலிருந்த மகேசு ''காலைத் தொட்டுக் கும்பிடுங்கள். நல்லது என்று எல்லாரும் சொல்லுகிறார்கள்'' என்றார். எனக்குக் கை ஏவவில்லை.

''சரி, உங்களைப் பாக்கணுமா? எல்லாரையும் பாக்கிறேன், இருங்க, இருங்க, உனக்கு என்னப்பா வேணும்?'' ஒருவரைப் பார்த்துக் கேட்கிறார். அவரோ ''பிளெசிங்ஸ்-ஆசீர்வாதம்'' என்றார்.

'அதென்ன? அதெல்லாம் அப்பிடி லேசிலை கிடைச்சிடுமா?'' என்று சிரிக்கிறார். அப்புறம் தன் கையால் அவர் சிரசைஅழுத்தி விடுகிறார். அதுவே அவருடைய ஆசீர்வாதம். முன்னுலுள்ள கடைகளில் 25. 50, 100, 200 கிராம் என 'செண்டு' கலந்த விபூதிப் பாக்கெட்டுக்கள் வைத்திருக்கிறார்கள். அவற்றை வாங்கிவந்து பக்தர்கள் நீட்டுவதையும் அவர் அவற்றை இரு கைகளாலும் அழுத்தி விடுவதையும் இரண்டு நாளும் பல தடவைகள் கண்டேன்.

## ஒண்ணுமே தேவையில்லை

என்பக்கத்திலிருந்த நண்பர் மகேசு தன் மனைவியிடம் 'சொல்லு சொல்லு' என்று சைகை காட்டுகிறார். அவர் மாட்டேனென்று தலையசைக்கிறார். மகேசு 'சாமி, ஆபரேசன் செய்யவேணுமெண்டு சொல்லுறாங்கள். ஹோல் இந்த ஹார்ட் என்கிறான்கள்' என்கிறார், மனைவியின் நோயைப்பற்றி. ''ஆமாமா சொல்லுவாங்க, நிறையச் சொல்லுவாங்க. அசதியிருக்கும், அலுப்பிருக்கும்; பல்பிட்

டேஷன் (இதயத்துடிப்பு) இருக்கும்; ஆனா அதெல்லாம் தேவையில்லை. ரெஸ்ட் (ஓய்வு) கம்பீளீட் ரெஸ்ட் (முழு ஓய்வு) அதுதான் வேணும்'' என்கிறார் பகவான்.

இன்னொருவரை அழைத்து எனக்கு வலது பக்கத்திலிருந்த திரைக்குப் பின்னால் மாடிப்படியேறும் படிகள் இருந்த இடத்தில் நிறுத்துகிறார். ஏதோ கேட்கிறார், எனக்கு முன் நின்றபடியே; அடுத்தபடியாக மகேசுவை அதற்குள் நிறுத்தினார். வெளியே வரும்போது திரு. மகேசு 'ஐ வான்ட்டு டேக் மெமென்ரோ ஒஃப் திஸ் விஸிட் [இங்கு வந்ததற்கு ஞாபகச் சின்னம் ஒன்று கொண்டுசெல்ல விரும்புகிறேன்]' என்றார். பகவான் அவரைக் கூர்ந்து கவனித்தார். சுவாமிக்குப் புரியவில்லையோ என்ற ஐயத்தில் திரு. மகேசு 'சம்திங் இன் மெமறி [ஏதாவது ஞாபகத்துக்காக]' என்றார். 'என்ன, நான் கொடுக்கணமா' என்றார் பகவான்; சிரித்துக்கொண்டே. வலது கை மீண்டும் காற்றில் சுழன்றது. என்ன ஆச்சரியம்! ஒரு பதக்கம் அவர் கையில் மிளிர்ந்தது. ஒரு பக்கத்தில் சாயிபாபா படம், மறுபக்கத்தில் சிர்டி சாயிபாபா படம். அதைத் திருமதி மகேசுவின் கையில் கொடுத்தார்.

## புனிதக் கை என்னைத் தொட்டது

அடுத்து நான் எழுந்தேன்; எழும்போதே 'எனக்கு வயிற்றில் தீராத வியாதி என்கிறார்கள்' என்றேன். இப்பாக்கியம் அன்று கிடைக்குமெனத் தெரிந்திருந்தால் எப்படி என்ன கேட்பது என்று ஒத்திகை செய்திருப்பேன். வேலூருக்குப் போய்விட்டு இங்கு சென்றமையால் கேட்பதற்கு ஒன்றுமேயில்லைப் போலவே எனக்கு இருந்தது. மலைப்பும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் என்னை நிதானமாகச் சிந்திக்க முடியாதவாறு மயக்கிவிட்டன. அதே திரைக்குப் பின்னால் என்னை நிறுத்தினார், அவர் மற்றவர்களுக்குத் தெரியும்படியாகவே நின்றுகொண்டு என் வலது தோளைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் இடது கையினுல் பிடித்துக்கொண்டு 'சுகமில்லே, அமைதியில்லே, நிம்மதியில்லே ... .. பக்தியிருக்கு. விசுவாச மிருக்கு...ஆனு [வலது கைச்சுட்டுவிரலால் தன் தலே யைத் தொட்டுக் காட்டியவாறு] ஸ்திரமில்லே' என் ருர். என் கண்கள் பனித்தன. வார்த்தைகள் தொண் டைக்குள் சிக்கின. என்னுடைய பலவீனம் எது என்பது 'பட்' டெனத் தெளிவாயிற்று. இரு கைகளாலும் — பொத் தியிருந்த இரு கைகளாலும் வணங்குவதற்குக் குனிந்தேன். 'தாங்கள் சொல்வது உண்மைதான் சுவாமி' என்று சொல் லிக் கொண்டே.

''என்ன இது? இந்தமாதிரிச் சின்ன விஷயங்களுக்கெல் லாம் அழலாமா? நான் அனுக்கிரகிக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு கூட்டத்தின் மத்திக்குப் போய்விட்டார். தனியனுய் விடப்பட்ட நான் சுதாரித்துக் கொள்ள முயற் சிக்கிறேன். எதுவுமே சிந்தனையில் எழவில்லே. அனுக்கிர கிக்கிறேன் என்ருரே, அது போதாதா? மீண்டும் என்னி டம் வருகிருர். 'எனக்கும் அதாவது ஞாபகப் பொருள்...' என்று இழுக்கிறேன். ஏன் எனக்கு இந்த ஆசை வந்தது? பிறருக்கு பீற்றிக்கொள்ளவா? ஓர் ஆடு பள்ளத்தாக்கில் விழுந்தால் மற்ற ஆடுகளும் பள்ளத்தில் விழுவதில்லேயா? அதைப் போலத்தான். திரு. மகேசு கேட்டார் என்பதனுல் நானும் கேட்டுவிட்டேன். எனக்கு விசுவாசமாக வே தேவைப்பட்டதா? ஏன் கேட்டேன் என்று தோன்றிற்று. ''கொடுக்கிறேன்'' என்ருர். நான் இடத்தில் போய் அமர்ந்துவிட்டேன்.

## நெல்லுக்கிறைத்த நீர்

அடுத்தது வேடிக்கை பார்க்கவந்த என் நண்பர். அவர் நல்ல சுகதேகி. குறைகள் என்று குறிப்பாக எதுவுமில்லே. வந்தார். தனிமையில் பேசும் வாய்ப்பும் கிடைத்தது. ஆனுல் எதைக் கேட்பது? பின்னுல் சொன்னுர். ''எனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபசக்தி குறைந்து வருகிறது சுவாமி'' என்ருராம். ''நான் பிரசாதம் கொடுக்கிறேன்'' என்று பதில் கிடைத் ததாம்.

தனித்தனிப் பேட்டிகளும் முடிவடைகின்றன, சுரேந் திரன், ''நாங்கள் இன்றைக்கே ஊருக்குப் போகலாமா?'' என்கிருர்.

''இல்லே. சாயந்தரம் இரண்டு பேருமா வாங்கோ, துணிமணி கொடுக்கிறேன். அதுக்குப் பிறகு போகலாம். வேறுயாரையும் அழைச்சிண்டு வரவேண்டாம்'' என்கிருர். தாலியைப் பற்றியும் அவர் சொன்னுர். ''இதை எல்லோ ருக்கும் காண்பித்துக் கொண்டிருக்க வேண்டாம். இது காட்சிப் பொருளல்ல. எந்நேரமும் அணிந்திருந்தால் போதும்.''

இந்தத் தம்பதிகள் கொழும்பில் கோலாகலமான திரு மண ஏற்பாடு செய்துவிட்டு புட்டபர்த்திக்கு வந்திருக்கி ருர்கள். ஒரு கூறைச்சேலையை வாங்கி அதைப் பகவானி டம் நீட்டி ஆசீர்வாதம் பெற்றுத் திரும்பவே வந்திருக்கி ருர்கள் - கூட்டத்தின் மத்தியிலிருந்தபடி அதைத் தொட்டு ஆசீர்வாதம் செய்திருக்கிருர். அப்புறம் பேட்டியும் கிடைத் திருக்கிறது. ஊருக்குப் போவதாகச் சொல்லியிருக்கிருர் கள். ''நாளேக்கு கல்யாணத்தையும் முடிச்சிட்டுப் போக லாம்'' என்றிருக்கிருர். யாருடைய கல்யாணம் என்று மலேத்தவர்களுக்கு ''நாளேக்கு வியாழக்கிழமை. நல்ல நாள். இங்கேயே கல்யாணத்தை வச்சுக்கலாம்'' என்றிருக் கிருர். ஆனந்த மிகுதியிலும் தன்னே மறக்காத ஒரு தாயார்தான், எல்லா இலங்கையரையும் பார்க்க அனு மதிக்கும்படி கோரியவர். அனுமதி கிடைத்தது. உள்ளே படமெடுக்கவும் உத்தரவு கேட்டிருக்கிருர்கள். அதுவும் வழங்கப்பட்டது. ஆனல் வசதியாக அவர்களிடம் கமரா இல்லே. ஒரு கனேடியப் பெண்ணே ஒழுங்கு செய்திருந்தார் கள். உள்ளே நுழையும்போது அவரை அழைத்து வரவில்லே. ஆனல் அச்சத்தினுல் பின்னராவது போய்க் கூட்டிவரவில்லே. அதனல் படமெடுக்கும் வாய்ப்பை இழந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவரிடம் எதைக் கேட்கவும் கூச்சப்பட வேண்டியதில்லை; "காலையில் என்ன சாப்பிட்டீர்கள் சுவாமி?" என்று கேட்டாலும் பதில் சொல்லுவார் போலிருக்கிறது. எல்லோரையும் சகஜமாகவும் சௌஜன்மமாகவும் கூச்சமின்றியும் பழகச் செய்வதில் அவருக்கு நிகரேயில்லை. முன்னொருபோதும் காணாதவரையும் கூட ஆண்டாண்டாக அளவளாவிப் பழகியவர் போலவே நடத்துகிறார். ஒரு தாயின் பக்கத்தில் நிற்பது போன்ற உணர்ச்சியை ஊட்டி விடுகிறார். பிரேமையின் திருவுருவே, அன்பின் அழகு வடிவமே, கருணையின் கோலமே—என்று தோன்றும் சூழலை உருவாக்கிவிடுகிறார். அங்கே கூடுகிறவர்கள் எல்லாம் ஒரு தாய்பிள்ளைகள் போலப் பழகுவதன் மர்மமே இந்தச் சக்தியின் பிணைப்புத்தான் போலும்.

"எனக்கு டைம் ஆச்சு" என்றார் பகவான். கதவு திறக்கப்பட்டது. நாங்கள் வெளியேறினோம். வெளியே பகவான் பேட்டிக்கு அழைக்க வருவார் என்று உட்கார்ந்திருக்கிறது பக்தர் கூட்டம். "வொண்டர்புல்" என்றார் என் ஸ்கூட்டர் நண்பர். திருநீற்றுச்சரைகளைப் பக்குவமாக ஒன்று சேர்த்துக் கட்டினார். "இதைக் கவனமாய் வைச்சிருக்க வேணும். அங்கை கொஞ்ச விசரர் இருக்கிறார்கள். அவங்களுக்கு இதைக் குடுத்துப் பேய்க்காட்டி விடலாம்" என்கிறார். இன்னும் இந்த உலகத்தில் தானிருக்கிறார்.

சுவீப் விழுந்திருந்தாலும் இவ்வளவு மகிழ்ச்சியும் மன நிறைவும் எனக்குக் கிட்டியிருக்குமோ தெரியாது. இரவு வந்தேன், காலையில் இந்தப் பாக்கியம், பிரபல பாடகர் கண்டசாலா கூட வந்து இரண்டு மூன்று வாரங்கள் அங்கே தங்கியிருந்து விட்டு இந்தப் பேறு கிடைக்காமல் இரண்டொரு தினங்களுக்கு முன்தான் திரும்பியிருக்கிறார். நடந்ததையெல்லாம் மீண்டும் ஒழுங்குபடுத்தி நினைவுக்கு கொண்டுவர முயற்சிக்கிறேன். "திக்குத்தெரியாத காட்டில்" என்ற பாரதி பாடலின் பொருள் துலக்கமாகிறது. முதல் நாளிரவு வந்திறங்கியதும் ஏமாற்றத்தைத் தந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் காலையில் இந்திரலோகமோ, புனிதபுரியோ என்று மாறிவிட்ட விந்தையை எப்படி எடுத்துரைப்பது?

"என்ன சொன்னார்? என்ன கொடுத்தார்?" என்று சிலர் கேட்டார்கள். "என்ன நடந்தது?" என்றும் சிலர் விசாரித்தார்கள். நீண்ட நேரமாக உள்ளேயிருந்தோம் அல்லவா?

"வாரும். இடத்தைச் சுற்றிப் பார்ப்போம்" என்று நண்பரிடம் கூறினேன். அத்துடன் "நான் நாளைக்காலையும் நிற்பதாக உத்தேசம். நீர் இன்றே போகிறீரா?" என்று கேட்டேன். "இல்லையில்லை, நாளைக்கும் நான் நிண்டு பார்க்கப்போறன். இது ஒரு அதிசயம்தான் ஐசே" என்றார். எவ்வளவோ அவசரப்பட்டார். இப்போது அந்த அவசரத்தைக் காணவில்லை. பஸ் போக்குவரத்துப் பாதைப் படம், புகையிரதப்பாதைப்படம் இரண்டையும் வைத்துக் கொண்டு விரைவாய்ப் போவதெப்படி என்று கணக்குப் பண்ணிக்கொண்டிருந்தவர் தன்னுடைய அவசரத்தை ஒத்தி வைத்தார்.

பிரசாந்தி நிலையத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம்.

எந்தக் கோவிலையும் வலஞ்சுழியாக அல்லவோ சுற்றுகிறோம். ஆனால் ஏனென்று தெரியாது, பிரசாந்தி நிலையத்தை இடஞ்சுழியாகச் சுற்றினோம். முதலில் அதற்குள்ளேயே ஒரு தபாற்கந்தோர். வீட்டுக்கு ஓர் அஞ்சலட்டை எழுதிப் போஸ்ட் பண்ணினேன். அடுத்தது கன்டீன். மூன்று வேளையும் தேவையான உணவை முன்கூட்டியே சொல்லிவைத்துப் பெறலாம். முன்னரே துண்டு பெற வேண்டும், தாமாகவே உணவைப் பெற்றுக்கொள்ள வேண்டும், பரிமாறுவது கிடையாது, தரையில்தான் உட்கார்ந்து சாப்பிடவேண்டும், பிரமாண்டமான மண்டபம் ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்டு பூர்த்தியாகும் நிலையில் உள்ளது. சுமார் 200 அடி நீளமும் 60 அல்லது 70 அடி அகலமும் கொண்ட அந்த மண்டபத்துக்கு நடுவில் தூண்களே கிடையாது. கூரை போடப்பட்டிருக்கிறது. தரைக்கு கிட்டத்தட்ட $4 \times 3\frac{1}{2}$ அடி அளவுள்ள ஸ்லேட் அல்லது இளக்கமான கருங்கல் போன்ற கரிய நிறக்கல் பதித்துக்கொண்டிருந்தார்கள். அப்பால் அங்கு மும்மொழிகளில் வெளியாகும் ''சநாதன சாரதி'' என்னும் பத்திரிகையின் காரியாலயம். அது தனிப்பிரதிகளாக விற்பனையாவதில்லை. சந்தாதாரர்களுக்கு மட்டும்தான். பத்திரிகாசிரியரென நினைக்கிறேன். ஒருவர் அன்பாகப் பேசினார். விவரமாக விளக்கினார். கேட்ட எல்லாவற்றுக்கும் சலிக்காமல் சிரித்த முகத்தோடு பதில் சொன்னார். அங்கேயே ஓர் ஆஸ்பத்திரி, பொலிஸ் நிலையம், எல்லாம் இருக்கின்றன. எந்த நோய்வாய்ப்பட்டாலும் உடனடியாகச் சிகிச்சை பெறும்படி அறிவிப்புப் பலகைகளும் ஆங்காங்கே உள்ளன. ஒரு நூல் நிலையம் இருந்தது. குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே அது திறக்கப்பட்டிருக்கும். நாங்களிருவரும் சில நூல்களும் படங்களும் வாங்கினோம்.

## பகல் பஜனை

நேரம் கிட்டத்தட்ட 11 மணி. மண்டபத்துள் நுழைந்தோம். வரிசையாக நெருக்கமாக எல்லோரும் உட்கார்ந்திருக்கிறார்கள். டாண் என்று 11 மணிக்கு பஜனை ஆரம்பித்தது. பெரிய கிருஷ்ண விக்கிரகம் ஒன்று. வேறு விக்கிரகங்களும் இருந்தன. மனித அளவில் சாயிபாபா, சிர்டி சாயிபாபா படங்கள். கணீரென்ற குரல்கள் எடுத்துக் கொடுக்க எல்லோருமே திரும்பப் பாடுகிறார்கள். கேட்க இனிமையாயிருந்தது. பக்க வாத்தியங்களும் உண்டு. திரு. ராம் குமாரசாமியின் உறவு முறையான பெண்ணொருவர் அங்கு தொண்டராயிருக்கிறார். விக்கிரகங்களுக்கு இடது புறத்தில் ஒரு நாற்காலி. பஜனை நடைபெற்றுக்கொண்டிருக்கையில் பகவான் அதில் வந்து உட்கார்ந்து தாளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுக்கொண்டிருந்தார். சில தினங்களில் அவரும் பாடுவது உண்டு என்கிறார்கள்; சுமார் 40 நிமிஷங்களின் பின் ஆராத்தனை; அது முடிந்ததும் எல்லோரும் வெளியே சென்று வரிசையாகச் சாப்பாட்டுக்கு உட்காருவது போல் உட்கார்ந்தார்கள். அன்று வியாழக்கிழமையாதலால் பிரசாதம் வழங்கப்பட்டது. அன்று கேசரி கொடுத்தார்கள்.

## காத்திருந்தோம்

மதிய உணவை முடித்துக்கொண்டு அறைக்குச் சென்று சற்று ஓய்வெடுத்தோம். என்னுடைய நண்பரோ 'இதொரு புதினம் தானப்பா' என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தார். 2-30 மணியளவில் சென்று மீண்டும் பிரசாந்தி நிலையத்தின் முன்னால் உட்கார்ந்தோம். வெயிலாகத்தானிருந்தது. கொஞ்சநேரத்தில் வானம் கறுத்து மழைத்துளிகளும் வீழ்ந்தன. சிலர் அசையாமல் இருந்தார்கள். சிலர் ஒதுக்கிடம் தேடி ஓடினார்கள். பல தடவை பகவான் மாடியின் பல்வேறு பக்கங்களில் காணப்பட்டார். பக்தர்கள் அவரைத் தெரியும் பக்கமெல்லாம் கூட்டமாய் ஓடிச்சென்று வழிபட்டார்கள். கட்டட வேலைகள் நடக்குமிடங்களுக்கு அவர் பலதடவை போனார். அங்கு வேலை செய்துகொண்டிருந்தவர்களிடம் தெலுங்கில் ஏதோ வேகமாகப் பேசினார். அவருடைய நேரடி மேற்பார்வையிலே கட்டட வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. இடையிடையே லொறிகளில் கட்டடப் பொருட்களும் வந்துகொண்டிருந்தன. மாலை கல்கத்தா வாசிகள் எல்லோரையும் ஒரேயடியாக பேட்டிக்கு வரும்படி செய்தி வந்தது. கல்கத்தா வாசிகள் எல்லோரும் விழுந்தடித்து அறைக்குள் போனார்கள். ஒரு கல்கத்தா இளைஞன் பகவானைப் பேட்டி காணப் பெரிதும் விரும்பியவர்—அவர்மட்டும் அந்தச் சமயம் பார்த்து வெளியே போயிருந்தார். ஐயோ பாவமென்றிருந்தது. கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை. போனவர்கள் வெளியே வரும்போது இரண்டொருவர் பாபா தருவித்துக் கொடுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதக்கத்துடன் வந்தார்கள். தகப்பனுருக்கு வருத்தமெனை முறைப்பட்ட ஒருவர் ஒரு தைலப் போத்தலேயே பெற்றுக் கொண்டு வந்தார்.

பாபாவிடம் எதையெல்லாம் வேண்டி வருகிருர்கள். ஒருவரிடம் அளவுக்கு மீறிப் பணம் இருக்கிறதாம்: அதை எதில் முதலீடு செய்வது எனக் கேட்க வந்திருக்கிருர். 'பிளாட்ஸ்' குடிமனை கட்டி வாடகைக்கு விடும்படி பாபா கூறியிருக்கிருர். குத்தியன் எதுக்கோ அழுதானும் என்ற கதைதான், இருளுகிறது. 7 மணிக்கு பஜனை. மாப்பிள்ளை சுரேந்திரனும் எங்கள் பக்கத்தே உட்கார்ந்திருக்கிருன். நாங்கள் எழுந்து பிரார்த்தனை மண்டபத்துள் செல்கிறேம். அவன் அங்கேயே உட்கார்ந்திருக்கிருன்.

## துணிமணி

பஜனை தொடங்கியது. என் பக்கத்திலிருந்த சிறுவனெருவன் உற்சாகமாக தாளம் போட்டு உரக்கப் பாடுகிருன். இடையிடையே பாடுவதை நிறுத்திவிட்டு ஏதோ வாய்க்குள் முணுமுணுக்கிருன், பாட்டென்ருல் என்னவென்றே தெரியாத என் நண்பரும் பஜனையில் ஈடுபடுகிருர், பகவான் வந்து தன் ஆசனத்தில் அமர்ந்தார், இருந்தாற்போல் திடீரென்று வெளியேறுகிருர். பின்னர் ஆராதனைக்கு முன் தன் இருக்கைக்குத் திரும்பி விட்டார். ஆராதனை முடிந்ததும் எல்லோரும் வெளியே வந்து உட்கார்ந்தார்கள், நான் நண்பரோடு ஏதோ பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தேன், 'உஸ்' என்ருர்கள், நானும் உட்கார்ந்தேன். ஓங்காரம் உச்சரிக்கப்பட்டது.

தனியே வெளியில் தியானத்தில் ஈடுபட்டிருந்த சுரேந்திரனிடம்தான் பகவான் பஜனையின் போது வந்திருக்கிருர். பஜனை முடிந்ததும் தொண்டர்கள் தம்பதிகளை மாடிக்கு அழைத்துச் சென்ருர்கள். அன்று பிற்பகல் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டர் ஒரு சீலேப்பையில் துணிகளைக் கொண்டு அங்கு மிங்கும் போவதை அவதானித்திருந்தேன்; பாபாவின் துணி களாக்கும் என்றுதான் நான் நினைத்தேன்.

கடையில் விட்டு துணிகளை எடுப்பித்து ஒரு 'செலக் ஷன்' செய்திருப்பார் போலிருக்கிறது. பெண்ணுக்கு ஒரு சேலை; மாப்பிள்ளைக்கு ஒரு சால்வை, இரண்டு ஷர்ட் துணி ஆகியவற்றைக் கொடுத்து மீண்டும் ஆசீர்வதித்து அனுப் பினர். அவன் கொண்டுசென்ற ஒரு நூலில் தேதியையும் போட்டுக் கொடுத்திருக்கிறர். திருமணமான தேதியல்லவா?

எதையாவது எழுத போல்போயின்ரை நீட்டினுல் வாங்க மறுக்கும் பகவான் பேனுவினுலேயே எதையும் எழுதுகிறர்.

அன்றிரவு படுக்கும்போது காலையிலும் பேட்டிக்கு உட் கார்ந்திருப்பது, மத்தியானத்திற்கிடையில் எப்படி வசதி கிடைக்கிறதோ அம்மார்க்கமாக நான் பங்களூருக்கும், நண்பர் சென்னைக்கும் பயணமாவதெனத் திட்டமிட்டோம். எஸ். ஆர், எஸ்: பஸ் எமக்கில்லை; அது அதிகாலை 5-30 மணிக்கே புறப்பட்டுவிடுமே!

மறுநாள் வெள்ளி காலை. ஸ்நானத்தை முடித்துக் கொண்டு வெள்ளை வேட்டி ஷேர்ட்டுடன் நான் நிலை யத்தை அடைந்தபோது சுப்ரபாதம் பர்டிக்கொண்டு பக் தர்கள் வீதிவலம் வந்து கொண்டிருந்தார்கள். சரியாக ஆறுமணிக்கு முதல் நாளைப்போலவே உப்பரிகையில் பக வானின் தரிசனம். காலைச்சாப்பாடு, அயலிலுள்ள மக்கள் வாசலில் வரிசையாக உட்காந்திருக்கிறர்கள். விற்பதற்குப் பால், பூச்சரம், வீட்டுத் தோட்டங்களிலிருந்து ஏதாவது காய்கறி வைத்துக்கொண்டிருக்கிறர்கள்; 7 மணிக்கிடை யில் மீண்டும் போய் மணலில் உட்காந்திருக்கிறேம். 9மணி யளவில் பேட்டிக்கு அழைப்பதற்கு பகவான் வருகிறர். முதல் நாளைப்போலவே அதே பிடி, அதே நடை, அதே வேகம், அதே பாதை. சிலர் கைச் சைகையால் அழைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படுகிறார்கள். நான் முதல் வரிசையில் உட்கார்ந்திருக்கிறேன். நெஞ்சு படபடக்கிறது. என்முன்னால் வந்து தரிக்கிறார். அங்கியில் மறைந்திருக்கும் பாதம் வெளியே தெரிகிறது; என் கைவிரல் நான்கின் அகலமிருக்கும். சைஸ் 4 அளவாயிருக்கும் போலிருக்கிறது. என்னை உன்னிப்பாகப் பார்க்கிறார். கூப்பிய கரங்களுடன் அவர் முகத்தையே பார்க்கிறேன். அவர் பார்வை என்னிடமிருந்து அகலப் போகும் க்ஷணத்தில் நான் ஒத்திகை பார்த்ததே போல் தைரியத்துடன் மற்றவர்கள் சினப்பார்களே என்ற சிந்தனையின்றி 'சுவாமி, நான் இலங்கை' என்றேன். மீண்டும் என்னையே பார்த்தார். 'நல்லது' என்றார். 'இன்றைக்கே ஊருக்குப் புறப்படுவதாக உத்தேசம்' என்றேன். 'அதான் நேத்தைக்கெல்லாம் பாத்தாச்சே' என்றார். அவசரம் அவசரமாக அவர் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்கிறேன். பூப்போன்ற மிருதுவான பாதங்கள். கேட்பதற்கு இன்னுமொரு கேள்வியிருந்தது. உரிமை இருந்ததோ அறியேன். 'ஏதாவது ஞாபகப்பொருள் கொடுப்பதாய் சொன்னீர்கள்' என்றேன். 'ஞாபகம்...ஞாபகத்துக்கு' என்று இழுத்தார். இரண்டடி எடுத்து வைத்தார். மீண்டும் என்பக்கம் முகத்தைத் திருப்பினார். 'மனசிலேயிருந்தாப் போதாதா?' என்றார். கூப்பியபடியே சிரம் தாழ்த்தினேன்.

## லண்டன்வாசிக்கு விபூதிப் பிரசாதம்

எனக்குப் பின்னால் லண்டனிலிருந்து வந்த இந்தியர் ஒருவர் நின்றவர். பதினைந்து வருடமாக வெளிநாட்டிலேயே இருந்தவர். பாபாவையே தென்னாபிரிக்காவில்தான் முதன் முதலில் பார்த்தவர். மனைவியாருடன் இரண்டு மூன்று நாள் தங்கியிருந்தும் பேட்டி கிடைக்காதவர். மறுநாள் எப்படியும் பிரயாணம் பண்ண வேண்டியவர். 'நீங்கள் சுவாமியிடம் சொல்லலாம்' என்று பலர் அவருக்கு உற்சாகமூட்டியிருந்தனர். இரு கரங்களையும் என் தலைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே சுவாமியைப் பார்த்து நீட்டினார்; 'சுவாமி நான் லண்டன்' என்றார். இன்னொருமுறை பகவான் என்பக்க மாக முகத்தைத் திருப்பினார். பழைய நண்பரை அடை யாளம் கண்டது போன்ற ஒரு சிரிப்பு. வலது கை காற்றில் உயர்ந்தது. சுழன்றது. உள்ளங்கையின் மேற்பகுதி யிலிருந்து கண்ணைப் பறிக்கும் வெண்ணிற விபூதி சிறியது. அதை விரல்களால் பற்றினார். நீட்டியிருந்த கரங்களில் திணித்தார். தொடர்ந்து நடக்கிறார். பேட்டியளிக்க அவர் அறைக்குச் சென்றதும் நான் எழுந்துநின்று இன்றைய பகல் பஜனைக்கும் நிற்போமா என்று யோசிக்கிறேன். அப் படியில்லையென்று போவதானாலும் பாதையெது? பஸ்ஸா, புகையிரதமா? என்றும் யோசிக்கிறேன். என் நண்பர் அவ சரப்படுத்தினார். 'இனி வேலையில்லை, வாருங்கோ, ஏதா வது வழியிருக்கும்' என்றார். சுமார் 40 மணி நேரம் மட் டுமே தங்கியிருந்தும் அங்கேயே ஒட்டிவிட்டது போன்ற அனுபவத்தைத் தந்த அந்த ஆசிரமத்தைக் கண்களால் விழுங்குகிறேன். வெளியேறினேன்.

## காவல்தெய்வம் கைவிட்டதோ?

உடனடியாக தர்மாவரம் என்ற சந்திப்புக்கு ஒரு பஸ் புறப்படுவதாகத் தெரிந்தது. அதுவும் தனியார்துறை பஸ் தான். விழுந்தடித்து இருவரும் அதில் ஏறினோம். சுமார் 20 மைல் தூரம். மத்தியானம் அங்கு வந்து சேர்ந்ததும் ஒரு ஜட்காவைப் பிடித்துக்கொண்டு ரயில் நிலையத்திற்குப் போனோம். வெறிச்சோடிக் கிடந்தது. மாலை 4-30 மணி வரை இரு திசைகளிலும் ரயில் இல்லை. நண்பரோ காத் திருக்க விரும்பினார். நான் கால்நடையாக பஸ்நிலையம் திரும்பினேன். உடனே ஒரு பஸ் பங்களூர் போக இருந் தது; ஒரு சீட் மட்டுமே காலியாகவும் இருந்தது. மாலை யில் பங்களூர் வந்து சேர்ந்தேன். எனக்கு உதவிய நண் பர் தோமஸ் கொடுத்த விஸிடிங் கார்ட்டை எடுத்துப் பார்த்தேன், அதில் அவருடைய வீட்டு முகவரி இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியாலயத்துக்கு போன் பண்ணினேன், பதிலில்லை. இன்னொரு நண்பரின் முகவரி இருந்தது: ஒரு ஓட்டோ ரிக்ஷாவில் அலைந்து வீட்டைக் கண்டுபிடித்தேன், நான்கு தெருக்களால் அடைக்கப்பட்ட ஒரு செவ்வகப்பகுதி ஒரு புளொக். உள்ளேயிருக்கிற சகல வீடுகளுக்கும் இலக்கங்கள். கண்டுபிடிப்பதென்றால் லேசா? ஆள் வீட்டிலில்லை. புகையிரத நிலையத்துக்கு வந்து சென்னை வண்டியில் ஆசனம் 'புக்' பண்ணி இரவு பிரயாணமானேன்.

காலையில் திருக்கோயில் ஆசிரியர் திரு முருகவேளைப் பார்க்கப் போனேன். புட்டபர்த்தி பற்றி விசாரித்தார். தாலிகட்டும்போது சமஸ்கிருதத்தில் ஏதோ சுலோகம் சொன்னார் என்றதும் "ஆகா அந்த இடத்தில் ஆசாரியனுகிவிட்டார்" என்றார். "இங்கேயும் ஒரு சமித்தி உண்டு. என்னை சமயப்பிரசங்கங்களுக்கு கூப்பிடுவாங்க. பணம் கூடக் கொடுப்பாங்க" என்றார். "ஏதோ இருக்கணும். இல்லாமலா முன்ஷி போன்ற படிச்ச பெரியவங்கள் எல்லாம் அடியாராய் போய்ட்டாங்க" என்றார்; அவருக்கும் மேலும் அறியும் ஆவல் தீவிரமாயிருந்தது.

ஆமாம்! பணம்? எங்கேயிருந்து கிடைக்கிறது? பிரசாந்தி நிலையத்தில் பல இடங்கள் ஊதுபத்தி, புஷ்பம் முதலானவை தவிர எந்தக் காணிக்கையும் கொண்டுவரக் கூடாது என்ற அறிவிப்புக் காணப்பட்டது. அப்படியானல் .. ...நான் ஏன் ஆராய்ந்தேன்?

## என்ன செய்யிறது?

அடியார் கூட்டத்தின் நடுவே பகவான் நடந்து வரும்போது ஒருவர் 'சுவாமி' என்று ஈனக்குரலில் அழைத்தது ஞாபகத்துக்கு வந்தது. அப்போது "சுவாமி என்னத்தைச் செய்கிறது?" என்று கூறிக்கொண்டே நகர்ந்ததையும் நினைத்துப் பார்க்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புட்டபர்த்திக்குப் போகும்வரை நீ, நான் என்று தெரிந்தவர் தெரியாதவர் எல்லாம் உதவி, செய்ததும் சென்னையில் அலைந்ததும், இரவு ராமேஸ்வரம் வண்டியில் ஏறுவதற்கே இடமில்லாமல் திக்குமுக்காடியதும், திருச்சி எக்ஸ்பிரசில் முண்டியடித்து ஏறி ராமேஸ்வரம் வண்டியை திருச்சியில் பிடித்ததும், கையில் போதிய பணமில்லாமல் அவலப்பட்டதும், ராமேஸ்வரத்தில் கோவில் நைவேத்தியத்தை வாங்கிப் புசித்ததும், 'போட்' மெயிலில் அதுக்கு இதுக்கு என்று எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டதும், சிகரட் வாங்கக் காசின்றி சில்லறையனைத்தையும் சுரண்டிச் செலவழித்ததும் இலங்கைப் பத்து ரூபாவை ஆறு ரூபாவுக்குத் தாறியா என்றொருவன் கேட்டதும்—அப்பப்பா! கதை கதையாய் சொல்லலாம்.

## தலைமன்னார் கஸ்டம்ஸ்

நானும் பல துறைமுகங்களுக்கூடாக பிரயாணம் பண்ணியிருக்கிறேன்; தலைமன்னாரைப் போல நரகக் குழியொன்றை நான் காணவில்லை. அங்குள்ள கஸ்டம்ஸ் உத்தியோகத்தரைப் போல கீழ்த்தரமான பிச்சைக்காரரையும் நான் கண்டதில்லை. அவர்கள் உள்ளே வர முன்னரே வெளியேறிய பெட்டிகள் சில. கொழும்பில் பெரிய உத்தியோகத்தர் ஒருவரின் மனைவியை வரவேற்க அவர் உள்ளே அனுமதிக்கப் பட்டதும் அவருடைய பெட்டிகள் யாவும் யார் கண்ணிலும் தென்படாமல் வெளியேறியதும் சிலர் குனிந்து ஏதோ காதில் சொன்னதும் திறக்கப்படாமலே பெட்டிகள் எடுத்துச் செல்லப்பட்டதும் ஒரு பக்கம், ஒரு நாலு முழ வேட்டிதானும் வாங்காமல் வந்த என்னைப் போன்றவர்களுக்கு நிகழ்ந்த கெடுபிடி. என்னிடம் என் மனைவியைத் தெரிந்த ஒருவர் கொடுத்த ஒரு பருத்திச்சேலை மட்டும் இருந்தது. அதுவும் பங்களூரில் குளிர் தாங்க முடியாமல் நான் எடுத்து போர்த்தியதனால் கசங்கியிருந்தது. அதைவிட முக்கால் ரூபாவுக்கு வாங்கிய தடித்த பேனைக்கள்

ஐந்தாறு வைத்திருந்தேன்; அரை ரூபா பெறுமதியான இரண்டொரு மணிமாலை. ஆகா! என்ன ஜரூர்! என்ன கடமையுணர்வு! எல்லாவற்றுக்கும் வரிபோட்டுத் தீர்த்தார் ஒரு கண்ணியவான். அவருக்கு முன்னாலேயே அவற்றை நான் கடலில் வீசியிருக்கலாம். ஆனால் இவற்றுக்கெல்லாம் மேலும் காத்திருந்தது.

எல்லாம் முடிந்து புகையிரத நிலையத்தில் வந்து டிக்கட் வாங்கி ஏறியிருக்கிறோம். அந்த கஸ்டம்ஸ் மகானுபாவர்கள் மேற்சட்டையை மாத்திரம் கழற்றி வைத்துவிட்டு ஒவ்வொரு ரயில் பெட்டி வாயிலிலும் நிற்கிறார்கள் அந்தப் பேனாவைக் கொடு' 'அந்தக் கூலிங்கிளாசைத் தா.' எனக்கொரு நாலு'முழம் தாறியா?' என்ற பல்லவிகள். நாலு அறை கொடுக்கவேண்டும் போலிருந்தது. இரண்டு ஜின் அடித்தேன். புகையிரதநிலைய மேடையில் நின்று என் பிரசங்கத்தைத் தொடங்கினேன். 'பிச்சைக்கார நாயள். இந்த உத்தியோகம் பார்க்கிறதிலும் நல்லூரிலை ஒரு துவாய்த்துண்டை விரித்துப்போட்டிருந்திருக்கலாமே' என்று சரமாரியாகப் பொழிந்து தள்ளினேன். அவர்கள் முறைத்துப் பார்த்தார்கள். நான் என்ன கொக்கா? ஒரு பொலிஸ்காரர் என்னை நோக்கி வந்தார். அவருக்கு என்னுடைய எரிச்சல் புரிந்தது. ''உவங்களைப்பிடிச்சு சோதியும்; ஒவ்வொருத்தன் சட்டைப்பையிலும் இருக்கிற பொருட்கள் எப்படி அவர்களிடம் வந்தன என்று கேளும்' என்று அவருக்கே கேஸ் பிடித்துக் கொடுத்தேன். ஆங்கிலமும் தமிழும் துப்பு பறந்தன. நானும் பேசினேன். ஜின்னும் பேசிற்று. புகையிரதம் புறப்பட்டது.

## மீண்டும் நானானேன்

உலகத்தைச் சுமக்கின்றவன் 'நான்' என்கிற எண்ணம் தலைதூக்கிற்று. அதன் விளைவு, நெரிசலில் முண்டியடித்துக்கொண்டு இருக்க இடமின்றி தவித்துக்கொண்டிருந்த எங்கள் பெட்டியில் 'ரிஸர்வ்ட்' என்று ஒரு பகுதி

6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் ஓட்டவந்த புகையிரத உத்தியோகத்தர் ஒருவருடன் கொழுவினேன். கூட இருந்தவர்களுக்கு உஷார் கொடுத்து ஒட்டினுல் கிழித்தெறிவோம் என்று கூச்சலிடச் செய்தேன். 'தலைமன்னாரில் ஓட்டியிருந்தால் ஏறியே இருக்கமாட்டோம். இடைவழியில் ஓட்டிவிட்டு எழுந்திரு என்றால் இவர்கள் எங்கே போவது? என்று புகையிரதப்பகுதி ஒழுங்கு முறைகளை கரைகண்டவன் மாதிரி வாதாடினேன். வந்த ''கார்டு'' வாயடைத்து திரும்பிப் போனார். நான் ஹீரோவும் ஆனேன்.

நல்லூரில் பிறந்தவன் நல்லூர்த் தேருக்கும் ஊரிலில்லாமல் போனேம் என்ற மனத்தொய்வுடன் ஊர்வந்து சேர்ந்தேன்.

## பொய்யா?

இந்தியாப் பயணத்துக்கு பல திணைக்களங்களுக்கும் விண்ணப்பித்தபோது ஸ்தல யாத்திரை போவதாகவே குறிப்பிட்டிருந்தேன். அப்போது எந்த ஸ்தலத்துக்கு என்று தெரியாமலிருந்தது. இப்போதுதான் போன இடங்களிரண்டும் புனிதஸ்தலங்கள் தான் என்பதில் எனக்கு ஐயமில்லை. வேலூரில் மனித தெய்வங்களைக் கண்டேன். பணக்காரனுக்கும் ஒரேவித சிகிச்சை; பணக்காரரிடம் கறக்கிறார்கள்; ஏழைக்கு இலவசம்: அதனுலென்ன? புட்டபர்த்தியில் பகவானையே கண்டேன். அங்கே ஏழையும் வருகிறான், பணக்காரனும் வருகிறான். யாராவது பேதம் பாராட்டுகிறார்களா? நான் பொய் சொல்லவில்லை.

## 'நான்' சாகிறது

பரபரப்பை சந்தைப்படுத்தும் ஒரு பத்திரிகை 'ஸ்டண்டு' மனிதர் ஒருவரைப் வைத்து பிழைப்பு நடத்துகிறது. அவர் மகா ஆராய்ச்சி செய்தவர் போல பகவானைப்பற்றி யாரோ சொன்னதை யாரிடமோ கேட்டு போலி, பொய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று எழுதிய ஒரு கட்டுரையை 'ஓகோ' என்று அப்பத்திரிகை பிரசுரித்தது. இதை என் கவனத்திற்குக் கொண்டு வந்த நண்பர்கள் சிலர் என்னைப் பதில் எழுதும்படி தூண்டினார்கள். அவருக்குப் பதில் எழுதவும் ஆயிரம் லட்சம் என்று சவால் விடவும் எனக்கு 'கிறுக்'' இல்லை. ஆனாலும் பத்திரிகைக்கு என்றொரு தர்மம் இருக்கும்; வாசகருக்கு மறு பக்கத்தையும் தெரியப்படுத்தும் ஆவல் இருக்கும் என்ற எண்ணத்தில் நான் பார்த்த இரு சம்பவங்களையும் வர்ணித்து எழுதினேன். தர்க்க சாஸ்த்திரத்துக்கோ, பகுத்தறிவுக்கோ, விஞ்ஞானத்துக்கோ, பொது அறிவுக்கோ ஒவ்வாத முறையில் எழுதப்பட்ட அக்கட்டுரையின் வீரப்பிரதாபத்தில் ஒட்டைவிழும்படி என் கட்டுரை அமைந்தது. அப்பத்திரிகை என்ன செய்தது தெரியுமோ? எழுதியவரை தெரியவில்லை. வர்ணித்த சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்கள் விவரம் பூரணமாயில்லை - ஆகையால் தேவன் என்பவர் எழுதிய கடிதத்தைப் பிரசுரிக்கவில்லை என்று குறிப்பொன்றை வெளியிட்டிருந்தது. புட்டபர்த்தியின் பக்கம் தலையே வைத்துப் படுக்காதவர் எழுதிய 'புலுமாஸ்' பிரசுரத்துக்கு தகுந்தது, நேரே போனவன் கண்டதை எழுதினால் அத்தாட்சி எங்கேயாம்? ஆள்பதிவுத் திணைக்களம் எனக்கு இன்னும் அடையாள அட்டை வழங்கவில்லை. ஆனால் 'நான்' தேய்ந்தது.

''நீங்கள் விஜியின் தகப்பனாரா?'' என்று யாராவது கேட்கும்போது பிள்ளை பிரபல்யமடைவது பற்றிப் பெருமைப்பட்டாலும் 'நான்' மறைவதை என்னால் உணர முடிகிறது.

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் விழாவொன்றை நடத்தி 'முடித்தவர்கள்' தேவன் ஓய்வுபெற்றுவிட்டாரா, எங்கேயிருக்கிறார் என்றொரு ஏற்பாட்டுக் கூட்டத்தில் பேசிக் கொண்டதாகவும் கேள்விப்பட்டேன். செத்தே போனானா என்று கேட்கவில்லை. ஆனால் 'நான்' மடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி

இந்த 'நான்' அறவே தொலைந்த பிறகு ஒரு நாளைக்கு மீண்டும் புட்டபர்த்திக்குப் போகும் அவா உண்டு. வேறு வேலை எதுவும் வைத்துக்கொள்ளாமல் அங்கே போய் ஒரு பத்து நாள் நிற்கவேண்டும் போலிருக்கிறது. பங்களூரி லிருந்து அங்கே போகும்வரை குளுமை, செழிப்பு எதையும் காணமுடியாது; உலர்ந்து வரண்ட வெட்டவெளி. அங்கே போன பின்னரும் பிரமாத இயற்கையழகையோ செயற்கை யழகையோ காண முடியாது. ஆனால் அங்கே நிலவும் 'அற்மொஸ்ஃபியர்' அற்புதம்; அவருடைய தரிசனம் பெரும் வரப்பிரசாதம். போனேன், சொக்கினேன், மயங்கினேன். பஜனையும் பாட்டுமாகத் திரிகிறேன் என்று யாராவது நினைத்துவிடாதீர்கள். இது 'ஹிப்நெர்ட்டிசம்' அல்ல. யாரும் கட்டாயப்படுத்தி விளைந்ததுமல்ல.

## இப்பொழுது

இக்கட்டுரைத் தொடர் ஆரம்பித்த மறுநாளே எல் லோரும் என்னிடம் கேட்க விரும்பிய கேள்விக்கு இதுவரை நான் பதில் சொல்லவில்லை. "உங்கள் பாடு இப்ப எப் படி?" என்று நைஸாக விசாரிப்பவர்களும் இருக்கிறார்கள். "உங்களுக்கும் ஏதாவது மஜிக் நிகழ்ந்ததா?" என்று கிண் டலாகக் கேட்பவர்களும் இருக்கிறார்கள். உண்மை இவ் வளவுதான். அதன்பின்னர் எனக்கு இரண்டொரு தடவை வலி ஏற்பட்டிருக்கின்றது. முன்னைப்போல தீவிரமாயில்லை. அடிக்கடியுமில்லை. எடை 16 இறாத்தல் அதிகரித் திருக்கிறேன். முந்திய நிறை கிட்டாவிட்டாலும் 72 டிசம் பரில் என்னைப் பார்த்தவர்கள் அடுத்த டிசம்பர் வரை சீவிப்பேன் என நம்பியிருக்கமாட்டார்கள். 73 டிசம்பரில் சா/த பரீட்சை மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய கலை தீர முன் விடைத்தாள் திருத்தும் பரீட்சகராகவும் கடமையாற்றினேன், நோயைப்பற்றி இனி முணுமுணுக் கவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலூரில் ஆறுமாதத்துக்கொரு தடவை 'எக்ஸ்ரே' எடுத்து கல்லின் அளவைப்பாருங்கள் என்று ஆலோசனை கூறியிருந்தார்கள். 9 மாதங்களாச்சு; 'எக்ஸ்ரே' எடுக்கவில்லை: பகவானின் அனுக்கிரகத்தைப் பரிசோதனைக்கு உட்படுத்தவா? ஆனால் செய்யத்தான் போகிறேன். வேறு காரணமாக சிறுநீர்ப்பரிசோதனை மட்டும் அண்மையில் செய்யப்பட்டது: சீனி இல்லை: சதையம் இயங்கிக்கொண்டிருக்கிறது. மோசமாக சேதமுறவில்லை: உணவுச் சீரணத்துக்கான நொதியங்களையும் அது உற்பத்தியாக்குகிறது: அவை சிறுகுடலை அடைகின்றன, சந்தேகிக்க இடமில்லை: அச்சத்துடனுயினும் இப்பொழுது உணவை உட்கொள்ளக் கூடியதாயிருக்கிறது.

புட்டபர்த்தியில் நிகழ்வதெல்லாம் அற்புதம் என்று எதிர்பார்ப்பவர்களுக்கு இன்றைய என் நிலை திருப்தியைத் தருகிறதா?

## ஏன் எழுதினேன்?

நான் நேரில் கண்டதை பச்சையாகச் சொல்லியிருக்கிறேன். பங்கு போட்டுக்கொள்ளக்கூடிய அனுபவங்களானமையால், யாரையாவது கட்சி சேர்க்க இதில் ஒரு வரிதானுமில்லை. சுயபுராணம் நிறையப் பாடி இருக்கிறேன், காரணத்தோடு. 'நான்' நிறைந்த என்னைப்போன்றவர்கள் 'அங்கே எதை எதிர்பார்ப்பது' என்ற ஐயம் காலமும் நேரமும் கைகூடி வரும்போது எல்லாம் தானுகவே நடக்குமென்பதை இதை வாசித்த எவரும் மறுக்கமுடியுமா? என் நோயைப்பற்றியும் சாங்கோபாங்கமாக எழுதினேன்: உலகம் நன்றிகெட்டது என்று இனி நான் சொல்லமுடியுமா? எங்கோ விதைத்தது எங்கோ விளைந்திருக்கலாம். விளைச்சல் விளைச்சல் தானே! அது எவ்வளவு பாரதூரமான நோய் என்பதையறிந்தாலன்றி இதன் பின்னணியை சரிவரப் புரிதல் இலகுவன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மடியில் 13 திருநீற்றுச்சரைகள் விழுந்ததனுலேயோ என்னவோ 12 கட்டுரைகளில் இத்தொடரை முடிக்க எண்ணிய போதும் 13 ஆவது வரை நீண்டு விட்டது.

பிரசாந்தி நிலயத்தில் வாங்கி மூன்று மாதங்களுக்குப் பின்னர் 'பிறேம்' போட்ட ஒரு படம் என் வீட்டில் தொங்குகிறது. அதிலிருந்து விபூதி பிரவாகிக்க வேண்டாம். அந்த அருட்திருநோக்கு எனக்குக் காப்பு.

'எக்ஸ்ரே' எடுத்தால் அதன் முடிவை ஊர்சுற்றியாரிடம் சொல்கிறேன்.

சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை—இவை மலிந்த உலகம் எவ்வளவு இனிமையானது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையிலிருந்து....

■ பிறந்தவன் சாவது உறுதியெனில், செத்தவன் பிறப்பது உறுதியெனில், இந்த விலக்கொணுச் செய்திக்கு நீ அழுங்குதல் தகுதியன்று.

■ இச்சையற்முன், எல்லா இன்பங்களேயும் துறந்தான், எனதென்பதற்முன், யானென்பதற்முன். அவனே சாந்தி நிலே அடைகிருன்.

■ நல்லோரைக் காக்கவும், தீயன செய்வோரை அறிக்கவும், அறத்தை நிலே நிறுத்தவும் நான் யுகத்தோறும் பிறக்கிறேன்.

■ உண்மை அறிந்த யோகி 'நான் எதனேயும் செய்வதில்லே' என்றெண்ணக் கடவான். காண்கினும், கேட்கினும், தீண்டினும், மோப்பினும், உண்பினும், நடப்பினும், உயிர்ப்பினும், உறங்கினும், புலம்பினும், விடினும், வாங்கினும், இமைகளேத் திறப்பினும், மூடினும் எதிலும் 'இந்திரியங்கள் தம்முடைய விஷயங்களில் சலிக்கின்றன' என்று கருதியிருக்கக் கடவான்.

■ மிகைபட உண்போனுக்கு யோகமில்லே. உணவற்ருேனுக்கும் ஏகாந்த நிலே எய்தாது; மிகுதியாக உறங்குவோனுக்குமில்லே; மிகுதியாக விழிப்போனுக்கும் அது இல்லே.

■ நான் நீரில் சுவை; நான் ஞாயிற்றிலும் திங்களிலும் ஒளி; எல்லா வேதங்களிலும் நான் பிரணவம்; வானில் ஒலி நான்; ஆண் மக்களிடத்து நான் ஆண்மை; மண்ணில் தூய நாற்றமும், தீயில் சுடரும் நான்; எல்லா உயிர்களிலும் உயிர்ப்பு நான்; தவஞ் செய்வோரின் தவம் நான்; எல்லா உயிர்களுக்கும் சநாதனமான விதை நான்; புத்தியுடையோரின் புத்தி நான்; ஒளியுடையோரின் ஒளி நான்; வல்லோரிடத்தே விருப்பமும் விழைவும் தீர்ந்த வலிமை நான், உயிர்களிடத்து கடமை தவருத விருப்பம் நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

▮ நான் எல்லா உயிர்களிடத்தும் சமமானவன்; எனக்குப் பகைவனுமில்லை, நண்பனுமில்லை. ஆனால் என்னை அன்புடன் தொழுவோர் – அன்னவர் என்னகத்தமர்ந்தார்; அவரகத்து நான் உளேன்.

▮ எதெது பெருமையுடைத்து, உண்மையுடைத்து, அழகுடைத்து, வலிமையுடைத்து - அதுவெல்லாம் எனது ஒளியின் அம்சத்தில் பிறந்ததென்றுணர்.

▮ எவ்வுயிரையும் பகைத்தலின்றி, அவற்றிடம் நட்பும் சருணையும் உடையவனாய், யானென்பதும் எனதென்பதும் நீங்கி, இன்பத்தையும் துன்பத்தையும் நிகராகக் கொண்டு பொறுமையுடையவனாய், எப்போதும் மகிழ்ச்சியுடையவனாய், தன்னைக் கட்டியவனாய், திடநிச்சயமுடையவனாய், என்னிடத்தே மனத்தையும் மதியையும் அர்ப்பணஞ் செய்து என் தொண்டனாகிய யோகி எனக்கினியவன்;

▮ எங்கிருந்தாலும் ஆகாசம் தன் வண்மையால் பற்றற்று நிற்பதுபோல், உடம்பில் ஆத்மா எங்கணுமிருந்தாலும் பற்றுறுவதிலன்;

▮ எல்லாருடைய அகத்திலும் நான் புகுந்திருக்கிறேன்; நினைவும், ஞானமும், இவற்றின் நீக்கமும் - என்னிடமிருந்து பிறக்கின்றது. எல்லாத் தேசங்களிலும் அறியப்படும் பொருள் நான்; வேதாந்தத்தை ஆக்கியோன் யான்; வேத முணர்ந்தோன் யானே.

▮ அகங்காரம், வலிமை, செருக்கு, கர்மம், சினம், இரத்தல் - இவற்றை விட்டு, மமகாரம் நீங்கி சாந்தநிலை கொண்டவன் பிரம்மமாகத் தகுவான்.

—பாரதியின் தமிழாக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ல்லவைகளைக் கேள்
ல்லதையே பார்
ல்லதைச் செய்
ல்லதை நினை
ப்பொழுதுதான் கடவுள்
ருள் கிட்டும்;
ல்லாக் கெட்ட போக்குகளும்
ளைந்து எடுக்கப்படும்!

*

லுமிச்சம் விதைகளை விதைத்து
ாங்காய்கள் கிடைக்குமென்று
திர்பார்க்க முடியாது.
ாங்காய் விதைகளை விதைத்து
லுமிச்சம் பழங்கள் கிடைக்குமென்று
திர் பார்க்க முடியாது.
தேபோல,
ரு கெட்ட காரியத்தைச் செய்து
ல்ல முடிவை எதிர்பார்க்க முடியாது.
ரு நல்ல காரியத்தைச் செய்தால்
திலிருந்து கெட்ட பலன் வராது!

— பாபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org